


319

# என்னுரை

## சாவி—

## கலைஞரின் முன்னுரையுடன்

சாவி பப்ளிகேஷன்ஸ்

# என்னுரை

சாவி

சாவி பப்ளிகேஷன்ஸ்
8-எ/ஏழாவது பிரதான சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–28

© பதிப்புரிமை ஆசிரியருக்கே

முதல் பதிப்பு - மே, 1997

விலை - ரூபாய்: 60.00

சித்திரங்கள் : அரஸ்

அச்சிட்டோர் : ஸ்ரீ ஸ்கந்தா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-600 029.

Wrapper printed by : Madras Classic Prints (P) Ltd., Chennai-34

Laser Type Setting : Dijital Impressions, Chennai-34

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 20-5-1997.

# முன்னுரை

என்னுடைய கெழுதகை நண்பரும் - தமிழ் எழுத்தாளர்களில் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பவருமான திரு. சாவி அவர்கள், "குங்குமம்" இதழில் கிழமைதோறும் தொடர்ந்து எழுதி வந்த கட்டுரைகளையும், மேலும் சில கட்டுரைகளையும் தொகுத்து ஒரு நூலாகத் தந்துள்ளார். அவர் குங்குமத்தில் எழுதத் தொடங்கும்போதே, அதற்கு என்ன தலைப்பு வைக்கலாம் என்று என்னைக் கேட்டபோது, நான்தான் அவரிடம் "என்னுரை" என்ற தலைப்பிலேயே கிழமைதோறும் உங்கள் கருத்துக்களை எழுதுங்கள் என்று கூறியிருந்தேன். அந்தத் தலைப்பிலேயே "என்னுரை" என்ற பெயரிலே இந்த நூல் வெளியிடப்படுகின்றது. இந்த நூலினையும் நான்தான் வெளியிடவிருக்கின்றேன். அந்த அளவிற்கு திரு. சாவி அவர்களுக்கும், எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

இந்த நூலிலே எஸ்.எஸ்.வாசன், ராஜாஜி, ஜி.டி.நாயுடு, பெரியார், மகாத்மா காந்தி, காமராஜ்,

சதாசிவம் ஆகியோரைப் பற்றி ஒவ்வொரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்த வரிசையிலே என்னைப் பற்றியும் ஒரு இதழிலே சாவி எழுதத் தவறவில்லை. என்னை எந்த அளவிற்குப் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதற்கு அதிலே அவர் எழுதியிருக்கின்ற ஒரு பகுதியைப் படித்தால் தெரிந்து கொள்ள முடியும். திரு.சாவியைப் பார்த்து பல பேர் "எப்படி இந்த வயதிலே உங்களால் அயராமல் உழைக்க முடிகிறது" என்று கேட்டதற்கு அவர் கூறுகிறார் - "சிரமமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் ஏற்றுக்கொண்ட பொறுப்பைச் செய்து முடிக்க வேண்டும், எப்படியும் செய்து முடிக்க வேண்டும் என்ற கடமை உணர்வோடு செய்து வருகிறேன்" என்று கூறியதோடு நிறுத்தாமல், "இது கலைஞர் அவர்களிடமிருந்து நான் கற்றுக் கொண்ட பாடம்'' என்று முடித்து எனக்குப் பெருமையைச் சேர்த்திருக்கிறார்.

கர்நாடக இசையிலேயும் திரு.சாவி அவர்களுக்கு தனித்த ஆர்வமும் ஈடுபாடும் உண்டு என்பதை வெளிப்படுத்த, அந்தத் தலைப்பிலும் ஓர் அருமையான கட்டுரை தீட்டி பழங்காலத்து சங்கீத வித்வான்களை நினைவூட்டியிருக்கின்றார்.

ராஜாஜி பற்றி எழுதும்போது, விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கான நில மானியம் கோரி தான் எழுதிய கடிதத்திற்கு முதலமைச்சராக இருந்த ராஜாஜி அவர்களே பதில் எழுதியிருப்பதைக் கண்டு, நிலம் வழங்கியிருப்பார் என்ற ஆவலோடு கடிதத்தைப் பிரித்துப் படித்ததாகவும், அதில் ராஜாஜி, "நிலம்

கேட்டு உங்கள் தியாகத்தை விலை கூற வேண்டியது அவசியம் தானா?" என்று எழுதியிருப்பது, நம் நெஞ்சத்தைத் தொடுகின்றது. நவகாளியில் காந்தியடிகள் பாத யாத்திரை தொடங்கிய நேரத்தில் "கல்கி" இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த சாவி அவர்கள் அங்கே சென்றது பற்றியும், உத்தமர் காந்தியைச் சந்தித்தது பற்றியும் உருக்கமாக எழுதியிருப்பதும் இந்நூலுக்குத் தனிச் சிறப்பாகும்.

திரு.சாவி அவர்கள் தொடராக "குங்குமம்" இதழிலே எழுதியபோதே ஒவ்வொரு கிழமையும் நான் படித்து ரசித்தவைதான் என்றாலும், ஒட்டுமொத்தமாக நூல் வடிவிலே காணும்போது படிப்பதற்கும் தெரிந்து கொள்வதற்கும் உரிய பல செய்திகளை அவர் தொகுத்துத் தந்திருப்பது போற்றுதற்குரியது.

சாவி அவர்களின் எழுத்துக்கள் பல நூல்களாக வெளிவந்திருக்கின்றன. நவகாளி யாத்திரை, சிவகாமியின் செல்வன், வாஷிங்டனில் திருமணம் என்ற அரிய நூல்களின் வரிசையிலே இந்த "என்னுரை" என்ற நூலும் ஒன்றாக விளங்கிடும் என்பதில் சந்தேகமில்லை; அயராது தொடர வேண்டும் அவருடைய எழுத்துப்பணி என்று வாழ்த்துகிறேன்.

மு. கருணாநிதி



கலைஞர்

# 1. கலைஞர்

வருடா வருடம் வயதாகிக் கொண்டே போவதில் நம்முடைய சாதனை ஏதுமில்லை. என் பிறந்த நாளைப் பற்றி நான் அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை என்றாலும் சில தவிர்க்க முடியாத பிறந்த நாட்கள் மறக்க முடியாதவையாக அமைந்து விடுகின்றன.

அப்படிப்பட்ட ஒன்றுதான் என்னுடைய அறுபதாவது பிறந்த நாள்.

நண்பர்கள் சிலர் விழாக்குழு அமைத்து எனது அறுபதாவது பிறந்த நாளை முதலமைச்சர் கலைஞரின் தலைமையில் கொண்டாடுவது என்று தீர்மானித்தார்கள். பிறந்த நாள் கொண்டாடுவதில் எனக்கு விருப்பமில்லை என்றாலும் அந்த ஆண்டு விழாவுக்கு நான் ஒப்புக் கொண்டதற்குக் காரணம் அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி என்பதால்தான்.

கலைஞர் வந்து வாழ்த்தப் போகிறார் என்பது ஒன்றுதான் அந்த விழாவில் எனக்கிருந்த பெரிய கவர்ச்சி. நல்ல தமிழால் வாழ்த்துப் பெறுவதை யார்தான் விரும்ப மாட்டார்கள்?

ஏ.வி.எம்.ராஜேசுவரி திருமண மண்டபத்தில் விழா நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அன்று காலை பத்தரை மணிக்கு கோபாலபுரத்திலிருந்து எனக்கொரு தகவல்!

"சி.எம்.முக்கு உடம்பு சரியில்லை. இன்று விழாவுக்கு வரமாட்டார்." இந்தச் செய்தியைக் கலைஞரின் உதவியாளர் திரு சண்முகநாதன் சொல்லக் கேட்டதும் நான் 'அப்செட்' ஆனது போல் வேறு எப்போதும் ஆனதில்லை.

கலைஞருக்கு உடனே ஒரு கடிதம் எழுதி அனுப்பி வைத்தேன்.

"உடம்பு சரியில்லாத காரணத்தால் இன்று என் விழாவுக்கு வரமாட்டீர்கள் என்று கேள்விப்படுகிறேன். ஒரு பெரிய தலைவர் இப்படிச் செய்யலாமா? என்னை இப்படி ஒரு ஏமாற்றத்துக்குள்ளாக்கலாமா? நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் 104 டிகிரி காய்ச்சலிலும் உடம்பின் சோர்வைப் பொருட்படுத்தாமல் திரிபுரா காங்கிரஸ் மாநாட்டுக்குப் போய் தலைமை வகித்த நிகழ்ச்சியைத் தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அவ்வளவு காய்ச்சலோடு அவர் ஊர்வலத்திலும் கலந்து கொண்ட செய்தி தாங்கள் அறியாததல்லவே! இன்றைய விழாவில் நீங்கள் கலந்து கொள்வீர்கள் என்று நான் எவ்வளவு ஆவலாக உள்ளேன் என்பது நான் சொல்லாமலே உங்களுக்கு விளங்கும்" என்று அதில் குறிப்பிட்டிருந்தேன். அப்புறம் கலைஞரிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. மாலை ஆறு மணிக்கெல்லாம் மண்டபத்துக்கு வந்துவிட்டார். விழாவில் கலந்துகொண்டு மிக அருமையான சொற்பொழிவு ஒன்றும் நிகழ்த்தினார்.

தமது பேச்சைத் தொடங்கும்போது நான் காலையில்

எழுதியனுப்பிய கடிதத்தைக் குறிப்பிட்டதுடன் நிற்காமல் அதைப் படித்தும் காட்டினார்.

"நேதாஜியின் அன்றைய உடல்நிலையையும், எனது இன்றைய உடல் நிலையையும் ஒப்பிட்டு சாவி கோபமாகக் கடிதம் எழுதியிருக்கிறார். நேதாஜிக்கு அன்று வந்ததோ காய்ச்சல். இன்று எனக்கு வந்துள்ளதோ வயிற்றுக் கடுப்பு. ஒரே இடத்தில் தொடர்ந்து உட்கார்ந்திருக்க முடியாத நிலை. இருந்தும் ஏற்றுக்கொண்ட பணியை எப்படியும் செய்து முடிக்க வேண்டும் என்கிற கொள்கை காரணமாக, கடமை உணர்வு காரணமாக வந்திருக்கிறேன். நான் முன்னெச்செரிக்கையாகச் சில மருந்துகளை உட்கொண்ட பிறகே இந்த விழாவுக்கு வந்து பேசிக்கொண்டிருக்கிறேன்" என்றார்.

நான் நெகிழ்ந்து போனேன்.

இன்று என்னைப் பலபேர் கேட்கிறார்கள் :

"எப்படி இந்த வயதில் உங்களால் அயராமல் உழைக்க முடிகிறது?"

சிரமமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் ஏற்றுக் கொண்ட பொறுப்பைச் செய்து முடிக்க வேண்டும், எப்படியும் செய்து முடிக்க வேண்டும் என்ற கடமை உணர்வோடு செய்து வருகிறேன்.

இது கலைஞர் அவர்களிடமிருந்து நான் கற்றுக்கொண்ட பாடம்.



எஸ்.எஸ். வாசன்

# 2. எஸ்.எஸ். வாசன்

வாசன் என்ற பெயரைக் கேட்டதுமே, ஔவையார் படம் எடுத்த சினிமா அதிபர் என்றுதான் பல பேருக்கு நினைவு வரும்.

ஆனால், பட அதிபர் வாசனையும் மீறி அவருக்குள்ளே இருந்த பத்திரிகை ஆசிரியர் வாசனை பல பேருக்குத் தெரிந்திருக்காது. அந்த மாமனிதரை 'குளோஸ் அப்' பில் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றவர்களில் நானும் ஒருவன்.

திரு.வாசன் தலைமையில் இயங்கிய ஆசிரியர் குழுவினருடன் இணைந்து ஆனந்த விகடனில் பணிபுரிந்தபோது பத்திரிகைத் தொழிலில் நான் படித்துக் கொண்ட பாடங்களும், நுட்பங்களும் அதிகம். திரு.வாசனின் கம்பீரமான, கண்ணியமான தோற்றத்துக்கு ஏற்ற மாதிரியே அவருடைய பேச்சும் செயலும் இருக்கும். பொருள் செறிந்த பேச்சு, எதையும் தீர்க்கமாகச் சிந்தித்துப் பார்க்கும் ஆற்றல், எடிட்டிங் திறமை, நகைச்சுவை உணர்வு, மற்றவர்களின் திறமையைப் புரிந்து பாராட்டி, தட்டிக் கொடுக்கும் தாராள மனப்பான்மை, மலை புரண்டாலும் நிலை கலங்காத மனோதிடம் - இவ்வளவும் ஒருங்கிணைந்த ஒரு பர்ஸனாலிடிதான் வாசன்.

1962-ல் பொதுத் தேர்தல் நடைபெற்ற சமயம் வாசன் அவர்கள் ஜெமினி ஸ்தாபன நிர்வாகப் பொறுப்பை ஒரு சட்டைபோல் கழற்றி வைத்துவிட்டு, ஆனந்த

விகடன் தலையங்கம் மூலம் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி தேடும் நோக்கத்துடன் தினமும் விகடன் அலுவலகத்துக்கு வந்து போய்க் கொண்டிருந்தார். ஆனந்த விகடனின் ஸர்க்குலேஷன் பலம், வாசகர்களிடையே அதற்குள்ள செல்வாக்கு இரண்டையும் பயன்படுத்தி காங்கிரஸின் வெற்றிக்குப் பாடுபட வேண்டும். அதுவே இந்த நாட்டுக்கு விகடன் செய்யும் சிறந்த பணியாக இருக்க முடியும் என்று அவர் கருதினார். அந்த நாட்களில், வீட்டை மறந்து, ஸ்டுடியோவை மறந்து, இரவு பகலாக ஆனந்த விகடனிலேயே ஆசிரியர் குழுவோடு அமர்ந்து அரசியல் விஷயங்களை அலசி ஆராய்ந்து விவாதிப்பதில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார்.

அவருடைய நாட்டுப் பற்றையும், பத்திரிகைத் தொழிலில் அவருக்குள்ள ஆர்வத்தையும், அந்தத் தொழிலை அவர் எந்த அளவு நேசிக்கிறார் என்பதையும் அவரோடு பழகிய காலத்தில் என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு நாள் அப்படித்தான், நாங்கள் எல்லோரும் அந்த வாரம் எழுத வேண்டிய தலையங்கம் பற்றிய சர்ச்சையில் மூழ்கியிருந்தோம். அன்றைய 'எடிடோரியல் டிஸ்கஷன்' மிகத் தீவிரமாகவும், சூடாகவும் நடந்து கொண்டிருந்த நேரம்.

திடீரென்று பூஜை வேளையில் கரடி புகுந்த மாதிரி, எங்கள் சிந்தனைக்குத் தடைக்கல் போட்டதுபோல் டெலிபோன் மணி ஒலித்தது. வாசன் மிக மிக

எரிச்சலுடன் ரிசீவரை எடுத்துப் பேசினார்.

"யெஸ்! யார் பேசுவது? என்ன விஷயம்?" என்று புருவத்தை நெரித்துச் சிடுசிடுத்தார்.

"........"

"நான்சென்ஸ்! இதற்காகவா என்னைக் கூப்பிட்டாய்? இப்போது அதுதானா எனக்கு முக்கியம்? அது உங்களுடைய தலைவலி. என்னை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?"

"........"

"குதிரை செத்துப் போச்சுன்னா உடனே அதற்கு எவ்வளவு நஷ்ட ஈடு தரணுமோ அதைக் கொடுத்து செட்டில் பண்ண வேண்டியதுதானே? நான் இப்போது எவ்வளவு முக்கியமான டிஸ்கஷனில் இருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரிய வேண்டாமா?" என்று மிகக் கடுமையாகப் பேசி போனை வைத்துவிட்டார்.

விஷயம் இதுதான் :

பல்லாவரம் பக்கத்திலுள்ள ஒரு குன்றில் ஜெமினி படத்தின் அவுட்டோர் ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கிறது. வஞ்சிக்கோட்டை வாலிபனோ அல்லது வேறு ஏதோ தெரியவில்லை. குதிரைகள் பூட்டிய ராஜரீக வண்டி ஒன்று மலைப் பாதையில் வேகமாய்ப் போய்க் கொண்டிருக்கும்போது திடீரென சக்கரம் கழன்று வண்டியே கவிழ்ந்து குதிரை இறந்து

விடுகிறது. இறந்துபோன அந்தக் குதிரை உயர்ந்த ஜாதிக் குதிரை. மைசூர் மகாராஜாவுக்குச் சொந்தமானது. மிகுந்த பிரயாசையின் பேரில் வரவழைக்கப்பட்ட குதிரை. அந்தக் குதிரை இறந்து போனதும் படப்பிடிப்பு சம்பந்தப்பட்டவர்கள் பதறிப்போய் வாசனுக்கு டெலிபோனில் தகவல் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. வாசன் அவர்கள் அதையெல்லாம் சட்டென்று எங்களிடம் சொல்லி விடவில்லை. டிஸ்கஷன் எல்லாம் முடிந்து, நாங்கள் எல்லோரும் வேலை முடிந்த திருப்தியுடன் சாப்பிட்டு விட்டு வந்த பிறகுதான் சாவகாசமாகச் சொல்லி முடித்தார். 'நாமாக இருந்திருந்தால் அந்த நேரத்தில் எப்படிப் பதறிப் போயிருப்போம்?' என நான் எண்ணிப் பார்த்தேன்.

வாசன் அடிக்கடி சொல்வதுண்டு. "பத்திரிகை விஷயமாய் உங்களோடு கலந்துரையாடுவதில் எனக்குள்ள மகிழ்ச்சிக்கும், இன்பத்துக்கும் ஈடு எதுவுமில்லை. சினிமாத் தொழிலில் நிறையப் பணம் வருகிறது. பத்திரிகைத் தொழிலில் அந்த அளவுக்குப் பணம் சம்பாதிக்க முடியாதுதான். ஆனால் உங்களைப் போன்ற அறிவு ஜீவி.களோடு உட்கார்ந்து தேசிய அளவில் அரசியல் விஷயங்களை அலசும்போது ஏற்படுகிற திருப்திக்கும், மகிழ்ச்சிக்கும் அது ஈடாகுமா? படத் தொழில் 'பேயிங் பிஸினஸ்!' பத்திரிகைத் தொழில் 'பேயாத பிஸினஸ்!' என்று சொல்லிவிட்டுச் சிரிப்பார்.



திரு. சதாசிவம்

# 3. திரர் சதாசிவம்

பிராட்வே 144 - முகவரிக்கு நான் அடிக்கடி போவது வழக்கம். அங்கே தான் விகடன் அலுவலகம் இருந்தது. ஏதாவது ஜோக் எழுதிக் கொண்டு போய் நேரிலேயே கொடுத்து விட்டு வருவேன்.

டிராம் வண்டிகள் ஓடிக் கொண்டிருந்த காலம் அது. ரொம்ப தூரத்தில் மண்ணடிக்கு அருகில் டிராம் வரும்போதே டிங்-டிங் என்று அதன் மணி ஓசை விகடன் அலுவலகம் வரை கேட்கும்.

அந்த ஓசை கேட்டதும் விகடன் அலுவலகத்தில் ஓர் இளைஞர் பரபரப்படைந்து விடுவார். டிராம் வருவதற்குள் சில வேலைகளை அவசர அவசரமாக முடித்துக் கொண்டு டிராமைப் பிடிக்க வேகமாக வாசலுக்கு விரைவார். அந்த இளைஞர் டிராம் வண்டியில் மோஷனில் ஏறும் காட்சியை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்.

அவர் வேறு யாருமல்ல; பிற்காலத்தில் கல்கி அதிபர் திரு.டி.சதாசிவம் என்று பிரபலமாக அழைக்கப்பட்டவர் தான். திருமதி எம்.எஸ். அவர்களைத் திருமணம் செய்து கொண்ட சுந்தரபுருஷர்தான்.

திரு.சதாசிவம் அவர்கள் விகடன் அலுவலகத்தை விட்டு விலகிய பின்னர் 'ஹநுமான்' என்ற பெயரில் தொடங்கப்பட்ட பத்திரிகையில் சேர்ந்தார். பரதன் என்கிற ஆர்.பார்த்தசாரதி, ஹநுமான் பத்திரிகையின்

ஆசிரியராகவும் திரு.சதாசிவம் விளம்பர நிர்வாகியாகவும் இணைந்து அந்தப் பத்திரிகையைச் சில காலம் வெற்றிகரமாக நடத்தினார்கள்.

அந்தக் காலத்தில் (1936) டெலிபோனைச் சுழற்றியே விளம்பரங்களைப் பெற்றுவிடும் தனித்திறமை திரு சதாசிவத்துக்கு இருந்தது.

கேசரி பிரிண்டிங் ஒர்க்ஸ் சுந்தரம் ஐயரும், பிரபல காங்கிரஸ்காரர் ரகுராஜபாரதியும் ஹநுமான் பத்திரிகையின் உரிமையாளர்கள். நிர்வாகத்துடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக திரு.பார்த்தசாரதியும் சதாசிவமும் அந்தப் பத்திரிகையை விட்டு விலக நேர்ந்தது.

திரு.சதாசிவம் அவர்கள் எந்த முயற்சியில் ஈடுபட்டாலும், ஒரு தவமாக இருந்து, அதில் வெற்றி காணும் வரை ஓயமாட்டார்.

எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது துல்லியமாக இருக்க வேண்டும். எவ்விதத் தொய்வும் இன்றி நிறைவேற வேண்டும். நானறிந்தவரை Perfectionist என்ற சொல் திரு.சதாசிவம் அவர்களுக்குத்தான் முழுமையாகப் பொருந்தும்.

திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி சேவாசதனம் என்ற படத்தில் நடித்துக் கொண்டிருந்த நாட்கள் அவை. கிண்டியில் இருந்த ஒரு ஸ்டுடியோவில் நாள்தோறும் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. பத்திரிகை தொடர்பாக திரு.சதாசிவம் அடிக்கடி அந்தப்

படப்பிடிப்பு நடக்கும் இடத்துக்குப் போய் வருவார்.

அப்போது எம்.எஸ்.ஸுடன் ஏற்பட்ட பழக்கம் காதலாக மலர்ந்து திருமணத்தில் முடிந்தது.

திரு. சதாசிவம் கர்நாடக இசைப்பிரியர், சிறந்த ரசிகர். அவரே நன்றாகப் பாடுவார். ஒரு காலத்தில் தம்முடைய கம்பீரமான குரலில் தேசிய கீதங்களைப் பாடி கதராடைகள் விற்பனை செய்தவர். எனவே எம்.எஸ். இவரைக் கவுர்ந்ததிலும், எம்.எஸ்.ஸை இவர் கவர்ந்ததிலும் வியப்பு ஏதுமில்லை. ஒரு சுபயோக சுபதினத்தில் சதாசிவம் சுபலட்சுமியின் திருமணம் திருநீர்மலைத் திருக்கோயிலில் மிக எளியமுறையில் நடைபெற்றது.

இந்தத் திருமண தம்பதியரின் போட்டோ, அப்போது பம்பாயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த இல்லஸ்ட்ரேடட் வீக்லியில் வெளியாயிற்று. நான் அந்தப் படத்தைக் கத்தரித்து என் நோட்டுப் புத்தகம் ஒன்றில் ஒட்டி வைத்திருந்தது இன்னும் என் நினைவில் உள்ளது.

திருமணத்துக்குப் பின் திரு.சதாசிவம் தம்பதியர் கீழ்ப்பாக்கத்துக்குக் குடியேறியதும், அதன் பின்னர் அவர்கள் வாழ்க்கை படிப்படியாக உயர்ந்து உச்சத்தைத் தொட்டதும் தமிழகம் மட்டுமல்ல, தமிழ் கூறும் நல்லுலகமே அறிந்த உண்மை. திரு. சதாசிவம் விடுதலைப் போரில் கலந்து கொண்டு சிறைபுகுந்து தியாகங்கள் புரிந்தவர். அன்று முதல் இன்று வரை தூய கதராடையே அணிந்து கொண்டிருப்பவர்.

தேசியவாதி என்கிற முறையில் ராஜாஜி, மதுரை வைத்தியநாதய்யர், திருச்சி டி.எஸ்.எஸ்.ராஜன் போன்ற தலைவர்களுடனும் மாயவரம் சாமி அய்யங்கார், ஆர்.கே.சுப்பிரமணி பிள்ளை போன்ற காங்கிரஸ் பிரமுகர்களோடும் நட்போடு நெருங்கிப் பழகியவர்.

1940-ல் ஆசிரியர் கல்கி அவர்கள் காந்திஜியின் அனுமதியுடன் தனிப்பட்ட சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டு சிறைசெல்லத் திட்டமிட்டிருந்தார். அப்போது திரு.கல்கி ஆனந்த விகடனில் பொறுப்பாசிரியராக இருந்ததால் சத்தியாகிரகப்போரில் ஈடுபட விகடன் அதிபர் திரு.வாசனிடம் கடிதம் மூலம் அனுமதி கேட்டிருந்தார். தன்னிடம் முன் அனுமதி பெறாமலேயே கல்கி சத்தியாக்கிரகப்போரில் ஈடுபடத் திட்டமிட்டிருந்தது வாசனுக்குப் பிடிக்கவில்லை. இதனால் அவர்களிருவருக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட, அதன் காரணமாக கல்கி கிருஷ்ணமூர்த்தி விகடனை விட்டு விலக நேர்ந்தது.

திருமதி.எம்.எஸ். நடித்த சகுந்தலை படம் அப்போதுதான் ரிலீஸ் ஆகி இருந்தது. அந்த நாட்களில் கல்கி எழுதும் கலை விமரிசனங்கள் தமிழ் வாசகர்களுக்கு வேதவாக்கு. அதிலும் அவர் எழுதும் சினிமா விமரிசனத்தை மிகுந்த ஆவலோடு படிப்பார்கள். கல்கியின் பேனா ஒரு படத்தைப் பாராட்டி விட்டால் அந்தப் படம் வெற்றி விழாக்கள் கொண்டாடத் தவறியதில்லை. இந்த உண்மையை சதாசிவம் அவர்கள் நன்கு அறிந்திருந்தார். அது

மட்டுமல்ல; கல்கி எழுத்தில் அவருக்கு ஒரு பிரமையே இருந்தது.

சகுந்தலைக்கு கல்கி விமரிசனம் எழுதினால் சிறப்பாக இருக்குமே, அதனால் படத்துக்கு வெற்றியும் பெருமையும் கிட்டுமே என்று சதாசிவம் எண்ணினார். ஆனால், அது அத்தனை எளிதான காரியமாகத் தோன்றவில்லை. காரணம் கல்கி அப்போது மாயவரம் சிறையிலிருந்தார். மாயவரம் சாமி அய்யங்கார், ஆர்.கே.சுப்பிரமணியப்பிள்ளை போன்ற பிரமுகர்களெல்லாம் கல்கியின் சத்தியாக்கிரகம் மாயவரத்தில்தான் நடக்க வேண்டும் என்று விரும்பி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். மூன்று மாதம் சிறைத்தண்டனை பெற்ற கல்கி மாயவரம் சப்ஜெயிலில் காவல் வைக்கப்பட்டார். சிறைக்குள்ளிருந்த கல்கி அவர்களைத் தம்முடைய செல்வாக்கினால் வெளியே அழைத்துச் சென்று, தஞ்சாவூரில் ஓடிக் கொண்டிருந்த சகுந்தலை படத்தை பார்க்க வைத்ததுடன், அன்றிரவே கல்கியிடம் ஒரு விமர்சனத்தையும் எழுதி வாங்கிக் கொண்டு, அவரை பத்திரமாக மறுபடியும் ஜெயிலில் கொண்டு போய்ச் சேர்த்தும் விட்டார் சதாசிவம்! அந்த விமரிசனம் ஹிந்து பத்திரிகை உட்பட பல பத்திரிகைகளில் வெளியாயிற்று.

திரு.சதாசிவம் அவர்களை ஏற்கனவே கல்கி நன்கு அறிந்திருந்த போதிலும் இத்தனை சாமர்த்தியசாலி என்பதை அப்போதுதான் புரிந்து கொண்டார். சிறையிலிருந்து வெளியே வந்ததும் சொந்தப்பத்திரிகை

தொடங்கினால் திரு.சதாசிவத்தின் நிர்வாகத்தில் தான் அதை நடத்த வேண்டும் என்று அப்போதே முடிவு செய்தார்.

கடல் போன்ற கல்கி கார்டன்ஸ் பங்களா ஒரு காலத்தில் விருந்தோம்பலுக்குப் பெயர் போன இடமாகத் திகழ்ந்தது. அநேகமாக வாரம் ஒரு பெரிய விருந்து அந்த வீட்டில் நடக்கத் தவறியதில்லை. திரு. சதாசிவம் அவர்களது அறுசுவை உண்டி பிரசித்தமானது. சிரித்த முகத்துடன் அவர் விருந்தினர்களை உபசரிக்கும் பாங்கும், நகைச்சுவை கலந்த பேச்சும் விருந்தினர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும்.

ம.பொ.சி. ஒருமுறை சதாசிவம் வீட்டுக்குச் சாப்பிட அழைக்கப்பட்டிருந்தார். விருந்தின் இடையே முக்கிய ஐட்டமாகப் பால் பாயசம் வந்தது. 'ஐயோ! என்னால் முடியாது. இனி வயிற்றில் இடமில்லை' என்று உரிமையோடு மறுத்தார் ம.பொ.சி. திரு.சதாசிவம் சிரித்துக் கொண்டே 'அப்படிச் சொல்லாதீர்கள். திருவனந்தபுரம் போயிருக்கிறீர்களா? அங்கே பத்மநாப ஸ்வாமி கோவிலில் ஆண்டுதோறும் திருவிழா நடக்கும். கோயிலைச் சுற்றிப் பெரும் கூட்டம் நிரம்பி வழியும். கூட்டத்தின் நெருக்கடியில் மூச்சுத் திணறும். மகாராஜா சுவாமி தரிசனத்துக்கு வருவார். அவர் வருகிறார் என்றதுமே கூட்டத்தின் இடையில் வழி கிடைத்துவிடும். இடைஞ்சலே இல்லாமல் சந்நிதிக்குப் போய்ச் சேர்ந்து விடுவார். இப்போது இந்தப் பால் பாயாசம் மகாராஜா மாதிரி, சாப்பிடுங்கள். தன்னால்

இடம் கிடைத்துவிடும்' என்றார்!

கல்கி தோட்டத்துக்கு வராத பிரமுகர்கள் யாருமே இல்லை என்று சொல்லலாம். ஆவடி காங்கிரஸின் போது வந்திருந்த நேருஜி அவர்கள் ஆவடி போகிற வழியில் காரை கல்கி பங்களாவுக்கு விடச் சொல்லி திருமதி எம்.எஸ்., திரு சதாசிவம் இருவரையும் வியக்க வைத்த செய்தி அனைவரும் அறிந்ததுதான்.

'டைனமிஸம்' என்ற சொல்லுக்கு அர்த்தம் சதாசிவம் என்று சொன்னால் அது மிகையாகது. எந்த ஒரு முயற்சியாக இருப்பினும் அதை ஒரு இயக்கமாகச் செய்து சாதனை புரியும் ஆற்றல் படைத்தவர். தம் எண்ணத்துக்கு இசைவாகச் சுற்றி இருப்பவர்களையும் இயங்கச் செய்யும் வல்லமை பெற்றவர்.

அவருக்குக் கோபம் வருவதையும் அடுத்த நிமிடமே அந்தக் கோபம் தணிந்து சாந்த புருஷராக மாறி விடுவதையும் கல்கி அலுவலகத்தில் நான் பணிபுரிந்த காலத்தில் பலமுறை பார்த்திருக்கிறேன்.

கொஞ்ச நேரம் முன்பு புயலாகச் சீறிய அவரா இப்போது இப்படி தென்றலாக வீசுகிறார் என்று ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.

சற்றுமுன் எரிமலையாகக் கொநதளித்தவரா இப்போது இத்தனை குளுமையாக, பச்சை வாழப்பட்டையாக மாறி இருக்கிறார் என்று அதிசயித் திருக்கிறேன்.

சதாசிவம் என்கிற ரசனைக் கூட்டில் வாழ்ந்ததால்தான் திருமதி எம்.எஸ். என்ற இசைக்குயில் தன் சங்கீத இறகுகளைப் புவியெங்கும் வீசிப் பறக்க முடிந்தது என்றால் அதை யாரும் மறுப்பதற்கில்லை.

திருமதி எம்.எஸ்.ஸின் இசை நிகழ்ச்சிகள் மூலம் ஈட்டிய பெரும் செல்வத்தை நல்ல பல காரியங்களுக்கு வாரி வாரி வழங்கிய வள்ளல் கணவர் சதாசிவம்.


செய்வன திருத்தச் செய் என்ற கொள்கையுடைய திரு.சதாசிவம் தமது விசாலமான தோட்டத்தில் புறங்கை கட்டிக் கொண்டு உலாவுகிறார் என்றால் அச்சமயம் தான் கல்கி வளர்ச்சி பற்றியும் எம்.எஸ்ஸின் எதிர்காலம் பற்றியும் தீவிரமாகச் சிந்தித்து திட்டமிடுகிறார் என்று அர்த்தம்.

திருமதி.எம்.எஸ்ஸின் புகழ் இந்த அளவுக்கு உலகம் முழுவதும், ஆர்.ஆர்.சபையிலிருந்து ஐ.நா.சபை வரை பரவியிருக்கிறது என்றால் அதற்கு எம்.எஸ்ஸின் இசைப்புலமை மட்டும் காரணமல்ல; திரு.சதாசிவம் அவர்களின் அயராத உழைப்பும், அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளுமே முக்கியம்.

திருமதி எம்.எஸ்., திரு.சதாசிவம் இவர்கள் அடிக்கடி சென்றுவரும் திருத்தலங்கள் மூன்றுதான். காஞ்சி, திருப்பதி, புட்டபர்த்தி இம்மூன்றுமே அவை. காஞ்சிப் பெரியவர்களிடம், புட்டபர்த்தி பாபாவிடம் திருப்பதி தெய்வத்திடம் அவர்கள் கொண்டுள்ள ஆழ்ந்த பக்தி கொஞ்ச நஞ்சமன்று. இந்த மூன்று தெய்வங்களின்

அருளும் எம்.எஸ். சதாசிவம் தம்பதியருக்குப் பரிபூரணமாய் வாய்த்திருக்கிறது.

ஒரு ரிஷி போல் வாழ்ந்து வரும் திரு.சதாசிவம் அவர்களுக்கு இப்போது வயது 94 நிறைகிறது. அவருடைய ஆரோக்கியமான வாழ்க்கைக்குக் காரணம் ஒன்று உண்டென்றால் அது அவருடைய இனிமையான இயல்பான நகைச்சுவை உணர்வுதான். நமஸ்கரிக்கிறேன்.



நாயர் ஸான்

# 4. நாயர்ஸான்

முதன் முறை நான் ஜப்பான் போயிருந்தபோது நாயர்ஸான் பற்றி கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க விரும்பினேன். டோக்கியோ கின்ஸாப்பகுதியில் 'நாயர் ரெஸ்டாரெண்ட்' என்ற பெயரில் உணவுக்கூடம் ஒன்று உள்ளது. பகல் உணவுக்காக ஒருநாள் அங்கே போயிருந்தபோது, நாயர்ஸான் என்னைப் பார்த்துவிட்டு 'தமிழ்நாடா?' என்று அன்புடன் விசாரித்தார். சுடச்சுட உணவு தந்து உபசரித்தார். இரண்டொரு தினங்களில் எங்களுக்குள் ஒரு சகோதர பாசம் ஏற்பட்டு ராமனும் குகனுமாகிவிட்டோம். பணம் கொடுக்கப் போனபோது, "நோ நோ! முதல்முதலாக என் உணவகத்தில் சாப்பிடுகிறீர்கள். உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆகவே, நான் பணம் வாங்க மாட்டேன். அடுத்தமுறை வரும்போது வாங்கிக் கொள்கிறேன்" என்று சகோதர பாசத்தோடு சொல்லி அனுப்பிவிட்டார்.

பின்னர் சில ஆண்டுகள் கழித்து நான் மறுபடியும் ஜப்பான் போனபோது அவரை மீண்டும் சந்தித்தேன். அப்போது அவர் தமது அரசியல் வாழ்வின் சுயசரிதையை எழுதி முடிக்கும் தறுவாயில் இருந்தார்.

டில்லியில் புகழ்பெற்ற புத்தக நிறுவனம் ஒன்று அதை வெளியிட ஒப்பந்தம் செய்திருந்தது.

ஆங்கிலத்தில் வெளிவருவது போலவே இந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் தம் சுயசரிதை வெளிவர வேண்டும் என்ற தமது

விருப்பத்தை என்னிடம் வெளியிட்டார். ஆனால் அதற்கான திட்டம் ஏதும் அப்போது அவரிடம் இல்லை.

நான் சென்னை திரும்பிய சில மாதங்களுக்குப் பின் நாயர்ஸானே இங்கு வந்து சோழா ஹோட்டலில் தங்கியிருந்தார். அப்போது என்னை அழைத்து, "என் சுயசரிதையைத் தமிழில் நீங்கள் கொண்டுவர வேண்டும். செய்து தருவீர்களா?" என்று கேட்டார். மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டேன். அப்படியே செய்தும் தந்தேன். புத்தகம் அச்சிடுவதற்கான செலவு முழுதும் அவரே ஏற்றுக்கொண்டார். எனினும் அதற்கான வரவு செலவுக்கணக்கை துல்லியமாக எழுதி அவரிடம் ஒப்படைத்தேன்.

என் மீதும், என் நேர்மை மீதும் அவருக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது பின்னொரு சமயம் வெளிப்பட்டது.

பத்திரிகை நடத்துவதில் பல ஏற்றத்தாழ்வுகளை நான் சந்தித்ததுண்டு. பொருளாதார நெருக்கடி என்னை முற்றுகையிட்ட ஒரு காலகட்டத்தில் நான் ஜப்பானில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

சிவப்புக் கம்பளம் விரிக்காத குறையாக என்னை வரவேற்று உபசரித்தார். நான் சற்று கவலையோடு இருப்பதைப் பார்த்து விட்டு, 'என்ன விஷயம்?' என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை, ஒரு லட்சம் ரூபாய் பணம் கிடைத்தால் எனது பிஸினஸில் ஒரு இக்கட்டான

கட்டத்தைத் தாண்டிவிட முடியும்" என்றேன். அதன் பொருள் அவருக்குப் புரிந்தது.

"சரி.... நான் பணம் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. வட்டி வாங்க மாட்டேன். உங்களால் எப்படித் திருப்பித் தர முடியுமோ, எப்போது முடியுமோ, அந்த வகையில் திருப்பித் தாருங்கள். உங்கள் பாங்க் அக்கௌண்ட் நம்பரைக் கொடுங்கள். திருவனந்தபுரம் 'பாங்க் ஆஃப் இந்தியா'வில் எனக்கு கணக்கு இருக்கிறது. அங்கிருந்து டிரான்ஸ்ஃபர் செய்யச் சொல்கிறேன்" என்றார்.

நெகிழ்ந்து போனேன். நான் சென்னை திரும்பி வந்து சேருவதற்குள் எனக்கு முன்பாக என் பாங்க் அக்கௌண்டில் ஒரு லட்சம் ரூபாய் வரவு வைக்கப்பட்டிருந்தது.

மாதாமாதம், தவறாமல் பத்தாயிரம் ரூபாய்க்கு டிராஃப்ட் எடுத்து அந்த பாங்குக்கே அனுப்பி, பத்தே மாதங்களில் கடனை அடைத்து விட்டேன்.

பத்திரிகையில் நஷ்டம் வருவதற்குக் கேட்கவா வேண்டும்! அடுத்தமுறை இன்னொரு பெரிய நெருக்கடி வந்தபோது இரண்டு லட்சம் வேண்டும் என்று கேட்டேன். அப்போதும் ஜப்பானுக்குப் போயிருந்தேன்.

மறுநாள் நான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு என்னைப் பார்க்க வந்த நாயர்ஸான் இரண்டு லட்சம் யென் நோட்டுகளைக் கற்றையாகக் கட்டிக் கொண்டு வந்து என்னிடம் நீட்டினார்.

"நான் இரண்டு லட்சம் ரூபாய் அல்லவா கேட்டேன்! நீங்கள் கொண்டுவந்திருப்பது இரண்டு லட்சம் யென்கள் அல்லவா?" என்று விளக்கியபோது, "ஓ... அப்படியா? நான் சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஸாரி... நாளைக்கே உங்கள் அக்கௌண்ட்டுக்கு திருவனந்தபுரம் பாங்க் மூலம் டிரான்ஸ்பர் செய்து விடுகிறேன். நீங்கள் கவலையில்லாமல் போய் வாருங்கள்" என்றார். சொன்னபடியே பணமும் அனுப்பி வைத்துவிட்டார்.

அந்த முறையும் நான் நேர்மையாக அந்தக் கடனைத் திருப்பிக் கொடுத்து விட்டேன்.

நான் ஒவ்வொரு மாதமும் அனுப்பி வைத்த 'டிமாண்ட் ட்ராப்ட்'களின் ஜெராக்ஸ் காப்பியை இன்னும் வைத்திருக்கிறேன்.

இவ்வளவையும் நான் சொல்லக் காரணம் உண்டு.

லட்ச ரூபாய் என்பது அந்தக்காலத்தில் சாதாரண விஷயம் அல்ல. நானும், நாயர்ஸானும் ஏதோ காலாகாலமாகத் தோளில் கைபோட்டுப் பழகியவர்களும் அல்ல. ஆனால் நான் பணம் கேட்ட மறுநொடியே வேறு எதைப் பற்றியும் சிந்திக்காமல் - ஒரு பத்திரம் கையெழுத்து எதுவும் இல்லாமல் - சரி என்று அவரைச் சொல்ல வைத்தது எது?

"இந்த மனிதனிடம் நேர்மை இருக்கிறது. கொடுத்த வார்த்தையைக் காப்பாற்றுவான்" என்று அவருள் தோன்றிய நம்பிக்கைதான் காரணமாயிருக்க

வேண்டும். அவரது சுயசரிதையை நான் தமிழில் கொண்டு வந்த போது செலவழித்த ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கெழுதிக் கொடுத்தேன். என்னை அவர் சரியானபடி கணிப்பதற்கு அது ஒரு வாய்ப்பாக அமைந்தது.

பண விஷயத்தில் நேர்மையுடன் செயல்படுவது என்பதை அன்று தொட்டு இன்று வரை நான் ஒரு விரதமாகவே கடைப்பிடித்து வருகிறேன்.

காலத்தினால் அவர் எனக்குச் செய்த உதவியை என் காலமெல்லாம் மறக்க மாட்டேன். நான் யாருக்காவது சிலை வைப்பதாக இருந்தால் அது நாயர்ஸானுக்காகவே இருக்கும்.

நாயர்ஸான் இப்போது உயிரோடு இல்லை. ஆனால் அவர் தூண்டிவிட்ட, என்னுள் தூங்கிக் கொண்டிருந்த நேர்மை ஒளி, இன்றும் பிரகாசமாய்ச் சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது!



பி.டி. கோயங்கா

# 5. தினமணிகதிர் ஆசிரியர்

தினமணி கதிர் ஆசிரியராக நான் இருந்தபோது எனக்குப் பல சோதனைகள். ஆனாலும் நான் மிகுந்த பொறுமை காட்டி அந்தச் சோதனைகளுக்கெல்லாம் ஈடு கொடுத்து இறுதியில் வெற்றி கண்டேன்.

கதிரில் என்னை ஆசிரியராக அமர்த்திவிட்டுப் பல ஆண்டுகள் வரை அதைப் பத்திரிகையில் அறிவிக்காமலே இருந்தார்கள். பலமுறை இதுபற்றி பி.டி.கோயங்காவிடம் கேட்டும் சரியான பதில் இல்லாமல் சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். என் கோபத்தை வெளிக்காட்டாமல் பொறுமையாக இருந்தே இந்தப் பிரச்சனையைத் தீர்க்க விரும்பினேன். நான் ஆசிரியர் பொறுப்பேற்றபின் கதிரின் சர்க்குலேஷன் பெருமளவு உயர்ந்தது என்பது ஊரறிந்த உண்மை. அப்படியிருந்தும் நிர்வாகம் என் பெயரை ஆசிரியர் என்று அறிவித்து வெளிப்படையாக அங்கீகரிக்க ஏனோ முன்வரவில்லை.

தானாகவே கனிந்து வரட்டும் என்று நான் நீண்டகாலம் காத்திருந்தது வீண் போகவில்லை.

ஒருநாள் நான் சற்றும் எதிர்பாராதபோது நிர்வாகமே என் பெயரை ஆசிரியர் என்று ‘இம்ப்ரிண்ட்’டில் போட்டு என்னை வியக்க வைத்தது. திரு. பி.டி.கோயங்கா என்னை அழைத்து “ஏம்பா, இம்ப்ரிண்ட்டில் உன் பேர் போட்டாச்சு. உனக்கு இப்ப திருப்திதானே?” என்று கேட்டார். நான் கொஞ்சம்

அழுத்தலாகவே தலையை மட்டும் அசைத்து விட்டு வந்தேன்.

சில வாரங்களுக்குப் பிறகு திரு. பி.டி.கோயங்கா என்னைக் கூப்பிட்டனுப்பினார்.

'நீ தினமணியை எடுத்து நடத்தணும். நாளையிலிருந்து நீதான் எடிட்டர்' என்ற அளவுக்குப் பேச ஆரம்பித்தார்.

'நமக்குத் தெரியாத விஷயத்தில் அல்லது துறையில் நாம் மூக்கை நீட்டக்கூடாது' என்று நான் எனக்குள் ஒரு சங்கல்பமே செய்து கொண்டிருந்தேன். எனவே "என்னால் முடியாது" என்று ஒரே வார்த்தையில் பதில் கூறிவிட்டேன்.

ஆனால், பகவன்தாஸ் கோயங்கா என்னை விடுவதாக இல்லை. நாள்தோறும் நச்சரித்துக் கொண்டே இருந்தார். நானும் பிடிகொடுத்துப் பேசவில்லை.

ஒருநாள் நான் என் உறவினர் வீட்டுக்குப் போயிருந்தபோது அங்கே போன் செய்து "என்னப்பா! நான் சொன்னேனே, என்ன முடிவு செய்தாய்?" என்று கேட்டார். நான் என் நிலைமையை விளக்கினேன்.

"நான் முழுக்க முழுக்க வாரப்பத்திரிகையாளன். தினசரிப் பத்திரிகை எனக்குச் சரிப்பட்டு வராது. எனக்கு அந்த வேலையும் தெரியாது. டெய்லி நடத்துவது தவில் வாசிப்பது மாதிரி. வீக்லியோ மிருதங்கம் வாசிப்பது மாதிரி. இரண்டுமே வாத்தியம்

தான் என்றாலும் தவில்காரர் மிருதங்கம் வாசிப்பதோ, மிருதங்கக்காரர் தவில் வாசிப்பதோ இரண்டிலுமே தேர்ச்சி பெற்றிருந்தால் தவிர சாத்தியமல்ல. நான் மிருதங்கம் வாசிப்பவன். எனக்கு தவில் வாத்தியத்தில் பயிற்சி கிடையாது. ஆகவே தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்" என்றேன்.

எவ்வளவு சொல்லியும் அவர் கேட்பதாயில்லை. சரி என்று அப்போதைக்கு என்னிடம் சொல்லிவிட்டு ஒரு வாரம் சென்றபின் மறுபடியும் பழைய பல்லவியை ஆரம்பித்துவிட்டார்.

நான் நழுவிக் கொண்டே இருந்தேன்.

சில ஆண்டுகள் கழித்து எம்.ஜி.ஆர். முதலமைச்சரானார். தினமணி கதிர் அட்டையில் எம்.ஜி.ஆர். படம் போட வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். நான் முடியாது என்று மறுத்து விட்டேன். அடுத்த சில மாதங்களுக்குள் நான் வெளிநாடு போயிருந்தபோது என் சீட்டு கிழிக்கப்பட்டது.

கலைஞர் அவர்களுக்கு இந்தச் செய்தி எட்டியதுதான் தாமதம், நான் அமெரிக்காவிலிருந்து திரும்பிய அன்றே, அக்கணமே என்னை டெலிபோனில் கூப்பிட்டு "எல்லாம் கேள்விப்பட்டேன். குங்குமம் என்ற பெயரில் ஒரு வார இதழ் தொடங்கி உங்களை அதற்கு ஆசிரியராக்கப் போகிறேன். வந்து சேருங்கள்" என்று அன்போடும், பாசத்தோடும், உரிமையோடும் சொன்னார். நான் மறு பேச்சின்றி மகிழ்ச்சியோடு

ஒப்புக்கொண்டேன். காரணம், அது வாரப் பத்திரிகை என்பதால்தான்.


இப்போதும் சொல்கிறேன். கலைஞர் என் ஆருயிர் நண்பர்தான் என்றாலும், நான் கதிரிலிருந்து வெளியே வந்த சமயம் அவர் வாரப்பத்திரிகை ஆரம்பிக்காமல் தினசரி ஒன்றைத் தொடங்கி என்னை ஆசிரியராக இருக்கச் சொல்லியிருந்தால், அவரிடமும் முடியாது என்றுதான் சொல்லியிருப்பேன்.

பத்திரிகைத் தொழிலைப் பொறுத்தவரை நான் இன்னும் ஓர் இளைஞன் தான். ஏறத்தாழ அறுபது ஆண்டுகளாக இத்தொழிலைச் செய்து வருகிறேன். இதுவரை உற்சாகம் குன்றியதில்லை. புதிய புதிய உத்திகளைக் கையாண்டு புதுமைகள் பல செய்ய வேண்டும் என்ற அடங்காத ஆர்வம் என் ரத்தத்தில் ஊறிக்கிடக்கிறது.

நண்பர்கள் என்னை ஒரு கேள்வி கேட்கிறார்கள்.

"இவ்வளவு நாள் எழுத்துத்துறையில் இருக்கிறீர்கள். சினிமாத் துறையில் இன்னும் ஏன் கால் பதிக்கவில்லை?"

ஒரே பதில்தான்: 'அது எனக்குத் தெரியாத துறை'.



ராஜாஜி

# 6. ராஜாஜி

முதல் முதல் நான் சிங்கப்பூர் போயிருந்த போது மலேசியாவிலிருந்து நண்பர் திரு. அலி அங்கே வந்திருந்தார். ஒரு நாள் மாலை ஆறுமணிக்கு, "சிங்கப்பூரைச் சுற்றிப் பார்க்கலாம் வாங்க" என்று என்னை அழைத்துக் கொண்டு வீதிகளில் நடக்க ஆரம்பித்தார். ஒரு 'சாக்லெட்'டை எடுத்து என்னிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னார். நான் அதன் மேல் சுற்றப்பட்டிருந்த காகிதத்தை உரித்து, தெருவில் வீசாமல் பாக்கெட்டில் போட்டுக் கொண்டேன். இதை அதிசயமாகப் பார்த்த என் நண்பர் அலி, "ஆச்சரியமாயிருக்கிறதே! இந்தியாவிலிருந்து இங்கே வருபவர்கள் குப்பையைக் கீழே போடுவதைத்தான் பார்த்திருக்கிறேன். உங்களுக்கு மட்டும் இந்தப் பழக்கம் எப்படி வந்தது?" என்று கேட்டார்

"கல்கி அலுவலகத்துக்கு ராஜாஜி அடிக்கடி வருவதுண்டு. ராஜாஜிக்குச் சாத்துக்குடி பழம் பிடிக்கும். பழத்தைத் தாமே தான் உரித்துச் சாப்பிடுவார். சில நாட்களில் திருமதி எம்.எஸ். வீட்டில் அவருக்குச் சாத்துக்குடி கொடுப்பார்கள். ராஜாஜி அதை உரித்துச் சாப்பிடும்போது நான் கவனித்திருக்கிறேன். ஒரு சின்ன செத்தையோ, குப்பையோ கீழே விழாது. அதை அவர் உரித்துச் சாப்பிடுவதே ஒரு தனிக் கலை!

முதலில் பழத்தின் மேல் தோலைப் பக்குவமாக நகத்தால் நடுப்பாதியில் வட்டமாகக் கீறி, இரண்டு கிண்ணங்களாகச் செய்து கொள்வார். பிறகு,

ஒவ்வொரு சுளையாக எடுத்து அதன் மீதுள்ள வெள்ளைத் தோல்களை அகற்றி, நார் நரம்புகளை நீக்கி, விதைகளை விலக்கிய பின் முத்துமுத்தான சுளைகளை மட்டும் சாப்பிடுவார்.

பிறகு அந்த நார், விதை எதையும் கீழே எறிய மாட்டார். அத்தனை குப்பைகளையும் அந்தப் பழத்தின் மூடி போன்ற கிண்ணங்களிலேயே அடைத்து நிரப்பிவிடுவார்!

அப்புறம் அந்த இரண்டு கிண்ணங்களையும் ஒன்று சேர்த்து பழையபடியே பந்துபோலச் செய்து கொண்டு, தம் வேட்டியிலிருந்து ஒரு நூலை உருவி அந்த நூலால் அந்தப் பந்தைச் சுற்றிக் கட்டி, தம் ஜிப்பா பாக்கெட்டில் போட்டுக்கொள்வார்.

காரில் வீட்டுக்குத் திரும்பிச் செல்லும்போது வழியில் கண்ணில் படும் குப்பைத்தொட்டியில் போட்டுவிடச் சொல்வார். அதுமட்டுமல்ல; அந்த டிரைவர் குப்பைத்தொட்டியில் போடுகிறாரா என்பதைக் காரில் இருந்தபடியே கண்காணிப்பார். இப்படி எந்தக் காரியம் செய்தாலும் அதைக் கச்சிதமாகச் செய்தால்தான் அவருக்குத் திருப்தி ஏற்படும். அந்தக் காலத்தில் ராஜாஜியை அருகிலிருந்து கூர்ந்து கவனித்து வந்த நான் ராஜாஜியைப் போல் எதையும் துல்லியமாகச் செய்யவேண்டுமென்று ஆசைப்படுவேன்.

ராஜாஜி அளவுக்கு Perfection இருக்காது என்றாலும் ஓரளவுக்காவது இருக்கும் என்று கருதுகிறேன்.



பாலக்காட்டு மணி ஐயர்

# 7. கர்நாடக இசை

கர்நாடக இசையின் மீது எனக்குள்ள ஆர்வமும், ஈடுபாடும் கொஞ்ச நஞ்சமல்ல.

சிறு பிராயத்திலேயே எங்கே கச்சேரி நடந்தாலும் அங்கெல்லாம் ஓடிப்போய் உட்கார்ந்து கொள்வேன். அதாவது டிக்கெட் இல்லாத கச்சேரிகளில் மட்டும்!

என்னால் மறக்கவே முடியாத கச்சேரி ஒன்று உண்டு. சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் நடந்த திருமணக் கச்சேரி அது. வருடம் நினைவில் இல்லை.

சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை - வாய்ப்பாட்டு, கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை - வயலின், புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை - கஞ்சிரா என்று எல்லாம் பிள்ளைமார்களாகவே அன்று குழுமியிருந்தார்கள். மிருதங்கம் மட்டும் பாலக்காடு மணி ஐயர். அன்று பழனி சுப்பிரமணியப் பிள்ளைதான் மிருதங்கம் வாசித்திருக்க வேண்டும். ஆனால் வாசிக்கவில்லை. காரணம் அன்று நடந்தது அவருடைய திருமணமாதலால் மணமேடையில் உட்கார வேண்டிய மாப்பிள்ளையே கச்சேரி மேடையில் உட்கார விரும்பாததுதான். எனவே தனக்கு பதில் பாலக்காடு மணி ஐயரை வாசிக்கச் சொல்லியிருந்தார்.

கச்சேரியின் தரம் பற்றிச் சொல்லவா வேண்டும்! கணீரென்ற குரல், தேர்ந்த விரல்கள். எடுத்த

எடுப்பிலேயே களை கட்டிவிட்டது.

சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை எப்போதும் லயத்துக்கு முக்கியத்துவம் தருபவர். ராஜமாணிக்கம் பிள்ளையோ தேனாய்ப் பொழிந்து தள்ளுபவர். மிருதங்கம், கஞ்சிரா - பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஒன்று சிம்மம் என்றால் இன்னொன்று புலி!

மிருதங்கத்தில் இரண்டு பக்கம் இருப்பது தெரியும். வலது புறம் வாசிக்கப்படும் வட்டத்தை வலந்தரை என்றும், இடதுபுறத்தைத் தொப்பி என்றும் குறிப்பிடுவார்கள்.

கச்சேரி நல்ல 'டெம்ப்போ'வில் போய்க் கொண்டிருந்தபோது திடீரென்று மிருதங்கத்தின் தொப்பியில் தொய்வு நேர்ந்து 'பொத் பொத்' என்று சத்தம் வந்தது. வேறு மிருதங்கத்தை மாற்றிக் கொள்ளவும் முடியாத இக்கட்டான நிலை.

பாலக்காடு மணி தவித்துப் போனார். என்ன செய்வது என்று தெரியவில்லை. கச்சேரியோ கன கம்பீரமாக அனைவரையும் சொக்க வைத்துக் கொண்டிருந்தது. ரசிகர்கள் உற்சாகமாய்த் தாளம் போட்டு ரசித்துக் கொண்டிருந்தார்கள். இடையில் நிறுத்துவதோ, வேறு ஏதும் செய்வதோ இயலாதநிலை. திருஷ்டிப் பரிகாரமாகப் போய்விடுமே!

கஞ்சிரா தட்சிணாமூர்த்திப் பிள்ளையின் மேதைத்தனம் இந்த இக்கட்டான தருணத்தில் மிக

அற்புதமாய் வெளிப்பட்டது.

அவர் பாலக்காடு மணி ஐயரைப் பார்த்துச் சொன்னார் :

"அப்பனே! நீ வலந்தரையைப் பார்த்துக்கொள். தொப்பியைப் பற்றிக் கவலைப்படாதே. அதை நான் கவனித்துக்கொள்கிறேன்".

என்ன செய்தார் தெரியுமா?

மிருதங்கத்தில் தொப்பி தரவேண்டிய ஒலியைத் தம் கஞ்சிராவிலேயே கொண்டு வந்து காட்டினார். அதாவது அவர் கஞ்சிராவையும் வாசித்துக் கொண்டு அதே சமயம் மிருதங்கத்தில் தொப்பி செயல்பட வேண்டிய கட்டத்தில், காலப்பிரமாணம் தவறாமல், அந்த ஒலியையும் எழுப்பி பாலக்காடு மணி ஐயர்தான் தொப்பி வாசிக்கிறாரோ என்ற பிரமையை ஏற்படுத்தி ரசிகர்களிடையே பெரும் ஆரவாரத்தை எழுப்பினார்!

அந்தக் கால லயக்கலைஞர்கள் தங்கள் தொழிலில் அப்படி ஒரு அதிசயமான சாதனையைச் செய்து காட்டினார்கள். இசைக்கலைஞர்களோ அசுரத்தனமாய்ச் சாதகம் செய்து தேவகானமாய்ப் பொழிந்து தள்ளினார்கள்.

எனக்குத் தெரிந்த இரண்டு ஜாம்பவான்களைப் பற்றிச் சொல்கிறேன். ஒருவர் ஜலதரங்கம் ரமணய்ய செட்டியார். இன்னொருவர் பாலக்காடு மணி ஐயர். அந்த இரண்டு பேருடனும் நான் நெருங்கிப் பழகியிருக்கின்றேன்.

ரமணய்ய செட்டியார் இசையில் ஆழ்ந்த புலமை பெற்றவர். சுருதி சேர்க்கும்போது காதைத் தீட்டிக்கொண்டு, மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்வார். அகத்தியர் போன்ற உருவம். ஏழு கிண்ணங்களில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு அவர் சுருதி சேர்க்கும் விதமே அலாதி. ஸரி கம பதநியில் எந்த ஸ்வரமானாலும் ஸுஸ்வரமாக ஒலிக்க வேண்டும். தமக்கு திருப்தி ஏற்படும் வரை தண்ணீரை அந்தக் கிண்ணங்களில் கூட்டியும் குறைத்தும் மாற்றிக்கொண்டே இருப்பார். கனமான தண்ணீரா, லேசான தண்ணீரா என்று நுட்பமாக ஆராய்ந்து பார்ப்பார்.

அவர் எந்த அளவுக்கு நுணுக்கமாகச் செயல்படுவார் என்பதற்கு ஓர் உதாரணம் :

ஏழு கிண்ணங்களையும் அர்த்த சந்திர வடிவில் வைத்துக் கொண்டு அவற்றில் ஜலத்தை நிரப்பித் தட்டித் தட்டி ஸ்வரங்களைப் பேச வைப்பார். 'ப' ஸ்வரம் சரியாக ஒலிக்கவில்லை என்றால் மிக மிகக் குறைவான அளவில் அந்தக் கிண்ணத்தில் தண்ணீர் விட்டுப் பார்ப்பார். அந்த அளவுக்கு விட்டால்தான் 'ப' பேசும். ஒரு 'ட்ராப்' என்பார்களே, அப்படி.

ஒரு இங்க் ஃபில்லரில் தண்ணீரை இழுத்து அதன் வழியாக ஒரு ட்ராப், ஒரே ஒரு ட்ராப் விட்டுத் தட்டினால் 'ப' பளிச்சென்று பேசும்!

பாலக்காடு மணி அய்யரைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

மயிலாப்பூர் எட்வர்ட் எலியட்ஸ் சாலையில் பிரபல தொழிலதிபர் ஒருவர் வீட்டுத் திருமணம்.

அன்று மாலை அரியக்குடி கச்சேரி. பாலக்காடு மணி அய்யர் மிருதங்கம்.

ஆனால் அன்று மணி அய்யர் சென்னையில் இல்லை. பம்பாயிலிருந்து வந்து சேர வேண்டும். மாலை ஐந்து மணி அளவில் விமானத்தில் வந்து மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் தங்கினார்.

கச்சேரிக்கு எல்லோரும் வந்து கூடிவிட்டார்கள். அரியக்குடியும் வந்து மேடையில் அமர்ந்து விட்டார். வயலின், கடம் எல்லோரும் வந்தாயிற்று. மணி ஐயர் மட்டும் வரவில்லை. திருமண வீட்டார் அருகிலுள்ள ஓட்டலுக்குக் கார் அனுப்பி மணி ஐயரை அழைத்து வரச் சொன்னார்கள்.

"மன்னிக்கணும், நான் இப்போது வருவதற்கில்லை. ஆறரை மணிக்கு வருகிறேன்" என்றார் மணி அய்யர்.

"கச்சேரிக்கு எல்லோரும் வந்து காத்திருக்கிறார்கள்" என்று பரபரத்தார் அவரை அழைக்கப் போனவர்.

"தயவு செய்து என்னைப் புரிஞ்சுக்கணும். நான் இப்போதுதான் ப்ளேனில் வந்திருக்கிறேன். அந்தச் சப்தம் 'கும்' என்று இன்னும் என் காதுகளை அடைத்துக் கொண்டிருக்கிறது. காதிலேயே தேங்கிக் கிடக்கும் சத்தத்தோடு போய் உட்கார்ந்தால் சரியாகச் சுருதி சேர்க்க முடியாது. பிளேன் ஸவுண்ட் காதிலிருந்து கொஞ்சம் க்ளியர் ஆகட்டும். லேட்டானாலும்

பரவாயில்லைன்னு சொல்லுங்க. வாசிப்பு சுத்தமாக இருக்க வேண்டாமா?" என்று விநயமும், அதேசமயம் சற்று கண்டிப்பும் கலந்த குரலில் சொல்லி அனுப்பி விட்டார் மணி ஐயர்.

வேறு வழியின்றி, மேலும் அரை மணி நேரம் காத்திருந்து, தாமதமாகத்தான் கச்சேரியைத் தொடங்க வேண்டியதாயிற்று.

இத்தகைய அபூர்வமான வித்வான்களை இந்தக் காலத்தில் பார்ப்பது அரிது. இசை உலகில் மட்டும் அல்ல. கலைத்துறைகள் எல்லாவற்றிலுமே தரம் குறைந்து போயிருக்கிறது. Art for art sake என்பது போய் Art for money sake என்றாகிவிட்டது.



ஜி.டி. நாயுடு

# 8. ஜி.டி. நாயுடு

திரு.ஜி.டி.நாயுடுவுக்கு அப்பளம் என்றால் அலர்ஜி. அவர் ஒரு சமயம் கேரளா போயிருந்தபோது அங்கே ஒரு ஊரில் அப்பள மாவைக் கால்களால் மிதித்துக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்துப் பதறிப் போனார். "சீ, அசிங்கம்! இனிமேல் அப்பளத்தைக் கையாலும் தொடமாட்டேன்" என்று விரதம் எடுத்துக் கொண்டார்.

நாயுடு அவர்கள் இந்த அநியாயத்தை ஒரு முறை தமிழ் அறிஞர் திரு.கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களிடம் சொல்லி முறையிட்டபோது, "அப்படியா! இன்றோடு நீங்க அந்த கேரளா அப்பளத்தை மறந்துடுங்க. இனி நான் உங்களுக்கு எங்கள் வீட்டில் அப்பளம் தயாரித்து அவ்வப்போது அனுப்பி வைக்கிறேன்'' என்று சொன்னது மட்டுமல்லாமல், நாயுடுவின் கடைசி காலம் வரை அனுப்பிக் கொண்டும் இருந்தார்.

நாயுடுவின் மகன் ஜி.டி.கோபாலின் திருமணம் கோவை 'கோபால் பாக்' பங்களாவில் கோலாகலமாக நடைபெற்றது. அந்த மங்கள நிகழ்ச்சிக்கு நான் போயிருந்தேன்.

'இந்தக் கல்யாணத்தில் அப்பளமும், அசைவமும் கண்டிப்பாகப் பரிமாறக்கூடாது' என்று நாயுடு தம் குடும்பத்தாரிடம் ஓர் உத்தரவுபோல் சொல்லி வைத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். ஆனால் அதுபற்றி அவரிடம் நான் எதுவுமே கேட்கவில்லை.

திருமணத்தன்று காலையில் நான் நாயுடுவைப் பார்த்து வணக்கம் சொல்லிய போது அவர் 'வாங்க' என்று கைகூப்பியபடி, "இப்படியே என்னோடு கொஞ்சம் வரீங்களா? சமையற்கட்டுப் பக்கம் வரை போய்ப் பார்த்துட்டு வரலாம்" என்று அழைத்துச் சென்றார்.

நாயுடுவைக் கண்டதும் சமையலறையில் இருந்தவர்கள் பதறிப் போனார்கள். சமையற்கட்டில் இவரது கட்டளையை மீறிப் பொரித்து வைக்கப்பட்டிருந்த அப்பளக் கூடைகளையும், சமைக்கப்பட்டிருந்த அசைவ 'அயிட்ட'ங்களையும் சட்டென்று அவர்களால் மறைத்துவிட முடியவில்லை. நாயுடுவின் கூர்மையான கண்கள் அந்த அப்பளக் கூடைகளைக் கவனிக்கத் தவறவும் இல்லை.

"பார்த்திங்களா! இப்படி எதையாவது இவங்க செய்வாங்கன்னு சந்தேகப்பட்டுதான் இங்கே வந்தேன். அப்பளம், போடலைன்னா கல்யாணச்சாப்பாடு போட்டது மாதிரி இருக்காதுன்னு வீட்டில் உள்ளவங்க சொல்லியிருப்பாங்க. நான் நெனச்சது சரியாப் போச்சு" என்று கோபமாக அந்த அப்பளக் கூடைகளை 'தரதர'வென்று குழாயடிக்கு நகர்த்திக் கொண்டு போனார். என்னவோ விபரீதம் நடக்கப் போகிறது என்று எல்லோரும் நடுங்கிப் போனார்கள்.

வேகமாக நடந்த நாயுடு குழாயடியில் போய் நின்றார். இழுத்து வந்த அப்பளக் கூடைகளை ஒவ்வொன்றாக குழாயின் அடியில் தள்ளி வைத்துத்

தண்ணீரைத் திருப்பி விட்டார். அப்பளம் முழுதும் நனைந்து பாழாய்ப் போயிற்று!

ஒரு வருடம் கழித்து மீண்டும் கோவை சென்றபோது நாயுடு அவர்களைப் பார்க்க 'கோபால்பாக்' போயிருந்தேன்.

வாழைப்பழம் தந்து உபசரித்தார். ஒரு பழத்தைச் சாப்பிட்டதும் "இது என்ன பழம் சொல்லுங்க பார்ப்பம்" என்று ஒரு புதிர் போட்டார்.

'ரஸ்தாளி' என்றேன்.

உடனே "நீங்க என்ன நார்த் ஆர்க்காடா?" என்று கேட்டார் நாயுடு. "கரெக்டாச் சொல்லிட்டீங்களே, எப்படி?" என்று வியந்தேன்.

நாயுடுவே அந்த சூட்சுமத்தை விளக்கினார் :

"என் மகன் திருமணத்தன்று குழாயடியில் அப்பளத்தின் மீது தண்ணீரைத் திருப்பி விட்டேனே, ஞாபமிருக்கா? மறுநாள் அந்த அப்பளங்களைக் கொண்டு போய் என் தோட்டத்து வாழை மரங்கள் அருகே வைத்துக்கொண்டு துப்பாக்கிக் குண்டுகளால் வாழை மரங்களின் அடித்தண்டில் பெரிய பெரிய துளைகள் போட்டேன். அந்தத் துளைகளில், நனைந்து போன அப்பளங்களையும் அசைவப் பண்டங்களையும் திணித்து மூடி விட்டேன்.

அந்த வாழை மரங்கள் இப்போது பெரிதாகி குலை தள்ளி பழம் தருகின்றன. அந்தப் பழங்கள்

வித்தியாசமாகவும் பெரிய பெரிய சைஸிலும் உள்ளன.

உங்களிடம் இப்போது தந்தது அந்தப் பழங்களில் ஒன்றுதான்" என்றார்.

வடஆர்க்காட்டில் ரஸ்தாளி ஜாதிதான் அதிகம். அந்த ருசிதான் எனக்குப் பழக்கம். நாயுடு கொடுத்த பழத்தின் சுவையும் கிட்டதட்ட ரஸ்தாளி போலவே இருந்ததால் ரஸ்தாளி என்றேன்.

"வாழைப்பழம் சாப்பிடுகிறவர்களிடம் ஒரு சைக்காலஜி உண்டு. தங்கள் பிராந்தியங்களில் விளையும் பழங்களின் ருசிதான் அவர்களுக்குத் தெரியும். எந்த வகை வாழைப்பழமாயிருந்தாலும் அது அவர்களுக்குப் பழக்கமான பழத்தின் ருசி போலத்தான் தோன்றும். அதனால் அந்தப் பழ வகையின் பெயரைத்தான் சொல்வார்கள். இதிலிருந்து அவர்கள் எந்த மாவட்டம் என்பதை எளிதில் கண்டுபிடித்து விடுவேன்!" என்று கூறிச் சிரித்தார் நாயுடு.

இதுபோலவே வருகிறவர்களுக்கெல்லாம் வாழைப் பழங்களைக் கொடுத்து, ஒவ்வொருவரின் அபிப்ராயத்தையும் தனித்தனியாகக் கேட்டு அவர் அவர்களின் சொந்த மாவட்டத்தைச் சொல்லி வியக்க வைத்துக் கொண்டிருந்தார் நாயுடு. இவரை விந்தை மனிதர் என்றும் தாவர விஞ்ஞானி என்றும் சொல்லலாம்தானே!



ஈ.வே.ரா. பெரியார்

# 9. லண்டனில் பெரியார்

என்னால் மறக்க முடியாத என் நெருங்கிய நண்பர்களில் கோவை தொழிலதிபர் திரு.ஜி.டி.நாயுடு அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவரைச் சந்திக்கும் போதெல்லாம் அவர் தம்முடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சுவாரசியமான நிகழ்ச்சிகளை என்னிடம் விவரிக்கத் தவறியதில்லை.

ஒருசமயம், திரு.நாயுடு அவர்கள் லண்டன் போயிருந்தபோது அங்கே ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். அப்போது பெரியார் அவர்கள் லண்டனுக்கு வந்திருப்பதாகவும், அதே ஓட்டலில் தங்கியிருப்பதாகவும் நாயுடுவின் காதுக்குச் செய்தி எட்டியது. நாயுடு மிகுந்தமகிழ்ச்சியோடு பெரியார் தங்கியிருந்த அறைக்குப் போன் செய்து "நீங்க லண்டனுக்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். எப்போது வந்தீங்க? உங்களைப் பார்த்துப் பேச ஆவலாயிருக்கிறேன்" என்றார்.

"நானும் இப்போதுதான் கேள்விப்பட்டேன். நீங்களும் இதே ஓட்டலில்தான் தங்கியிருப்பதாகச் சொன்னார்கள்" என்றார்.

"ஆமாம், நான் இப்போது கீழே டைனிங் ஹாலுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். தாங்கள் தயவு செய்து அங்கே வந்து விடமுடியுமா?" என்று கேட்டார் நாயுடு.

"சரி" என்றார் பெரியார்.

பெரியார் வருவதற்கு முன்பே டைனிங் ஹாலுக்குப் போய்விட்ட நாயுடு பெரியாருக்கும் சேர்த்து உணவு ஐட்டங்களுக்கு ஆர்டர் செய்து விட்டுக் காத்திருந்தார்.

பெரியார் அங்கு வந்து சேர்ந்த ஒரு சில நிமிடங்களுக்குள்ளாகவே ஆர்டர் பண்ணிய அயிட்டங்களும் மேஜைக்கு வந்து விட்டன.

"சாப்பிடுங்க ஐயா..." என்றார் நாயுடு.

"நான் இப்போதுதான் சாப்பிட்டேன். சாப்பிட்டு விட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன்'' என்றார் பெரியார்.

"இல்லை. நீங்கள் மறுக்கக்கூடாது. கொஞ்சமாவது சாப்பிடுங்கள்" என்று வற்புறுத்தினார் நாயுடு.

"அதெல்லாம் முடியாது, நான் ஏற்கெனவே வயிறு முட்டச் சாப்பிட்டுவிட்டுத் திணறிக் கொண்டிருக்கிறேன். இனி என்னால் ஒரு துண்டு ரொட்டிகூடச் சாப்பிட முடியாது! தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்" என்றார் பெரியார்.

"நான் உங்களை விடப்போவதில்லை, உங்களுக்கும் சேர்த்து ஒரு செட் ஆர்டர் பண்ணியாச்சு. தாங்கள் சாப்பிடாவிட்டால் அவ்வளவும் வீணாகிவிடும்'' என்றார் நாயுடு.

பெரியார் தர்மசங்கடத்தில் தவித்தார். சற்று யோசித்துவிட்டு, "அப்படியா?.. எவ்வளவு ரூபாய்க்கு ஆர்டர் பண்ணினீங்க?" என்று கேட்கவும், 'சுமார்

முன்னூறு ரூபாய்க்கு' என்றார் நாயுடு. அந்தக் காலத்தில் முன்னூறு ரூபாய் என்பது பெரிய தொகை.

"அப்படியா! அவ்வளவு பணமா!" என்று வியந்த பெரியார் சட்டென அத்தனை ஐட்டங்களையும் தனக்கு எதிரில் நகர்த்தி வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் சாப்பிட்டுத் தீர்த்துவிட்டார்!

இந்தச் சம்பவத்தை என்னிடம் விவரித்த நாயுடு அவர்கள் "இதிலிருந்து பெரியாரைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?" என்று கேட்டார்.

"பெரியார் ரொம்ப சிக்கனக்காரர் என்பது உலகறிந்த உண்மையாயிற்றே! செலவு பண்ணாமல் இருப்பது மட்டுமல்ல சிக்கனம். உணவுப் பொருட்களை வீணடிக்காமல் இருப்பதும் ஒருவகை சிக்கனம்தான். 'ஏற்கனவே சாப்பிட்டுவிட்டு வந்திருந்த போதிலும், தான் சாப்பிடாமல் போனால் அத்தனை உணவும் வீணாகிவிடுமே' என்ற பெரியாரின் சிக்கன உணர்வுதான் அவரது மனச்சாட்சியை உறுத்தியிருக்க வேண்டும்" என்றேன்.

# 10. திருச்சியில் பெரியார்

திருச்சியில் பெரியாரை பேட்டி காணச் சென்ற போது அவர் 'வாங்கய்யா!' என்று வாய் நிறையச் சொல்லி வரவேற்ற பண்பு கண்டு மெய்சிலிர்த்துப் போனேன்.

பழுத்த பழம் போல மேனி. உடல் தளர்ந்து போன வயோதிகம். அழுத்தம் திருத்தமான அவருடைய பேச்சில் உணர்ச்சி கொப்பளித்தது.

பேட்டி நடந்து கொண்டிருந்தபோது கரூரிலிருந்து கட்சித் தொண்டர்கள் சிலர் கும்பலாக ஐயாவைப் பார்க்க வந்திருந்தார்கள்

'எங்கிருந்து வந்திங்க?' என்று விசாரித்தார் பெரியார்.

அடுத்த புதன் கிழமை கரூரில் மீட்டிங். நீங்க வந்து பேசணும் ஐயா.'

'ஏழரை மணிக்கு வச்சுக்குங்க. வந்துடறேன் அவர்கள் மகிழ்ச்சியோடு திரும்பிச் சென்றார்கள்.

'இந்த வயசில் மீட்டிங், அது, இதுன்னு இப்படி அலையறீங்களே. முடியுதா?' என்று கேட்டேன் நான்.

'முடியுதாவது! ஒரு நாளைக்கு இரண்டு மூணு கூட்டத்துல கூடப் பேசறதுதான். முதல் முதல் நான் மீட்டிங் பேச போனப்ப, எவ்வளவு உற்சாகமாய்ப் போனேனோ, அதே உற்சாகத்தோட இன்றைக்கும்

போய்க் கொண்டிருக்கிறேன். உழைக்கணும்யா, நல்லா உழைக்கணும், அப்படிப் பிடிவாதமாய்ப் பிரசாரம் செஞ்சாத்தான் நம்ம லட்சியத்துல வெற்றி காணமுடியும்!' என்றார்.

இந்த வார்த்தைகள் ஆணி அடித்த மாதிரி என் உள்ளத்தில் பதிந்துவிட்டன. அன்று பெரியார் அவர்களிடம் கற்றுக் கொண்ட பாடத்தை நான் இன்றுவரை என் வாழ்க்கையில் மறக்காமல் கடைப்பிடித்து வருகிறேன்.

முதல் முதல் பத்திரிகை அலுவலகத்தில் சேர்ந்த போது எத்தனை உற்சாகத்துடன் இருந்தேனோ, அதே உற்சாகம் இன்றளவும் இம்மியளவும் குறையவில்லை.



காந்திஜி

# 11. "குவிட் இண்டியா"

வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து 'குவிட் இண்டியா' என்று குரல் கொடுத்த மகாத்மா காந்தியுடன் நேரு, படேல் போன்ற மூத்த தலைவர்களும் பல்லாயிரக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். அவர்களில் அடியேனும் ஒருவன். காந்திஜி புனாவிலுள்ள ஆகாகான் அரண்மனையில் காவலில் வைக்கப்பட்டு, தேசமே கொந்தளித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில் காந்திஜியின் பெயரில் ஓர் அறிக்கை வெளியாயிற்று.

'இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்கிறவர்கள் என்ன செய்ய வேண்டும்?' என்பது பற்றி காந்திஜியின் பெயரில் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியாகியிருந்தது. அது ஆட்சேபகரமான துண்டுப்பிரசுரம் என்பதால் மிக ரகசியமாக நண்பர்களுக்குள் பரிமாறிக் கொள்ளப்பட்டது. தண்டவாளத்தைப் பெயர்க்க வேண்டும், தபாலாபீசைக் கொளுத்த வேண்டும், தந்திக் கம்பிகளை வெட்ட வேண்டும் என்றெல்லாம் அந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்போது நினைத்துப் பார்த்தால் அகிம்சா மூர்த்தியான காந்திஜி அப்படியெல்லாம் வன்முறையைத் தூண்டிவிட்டிருப்பாரா என்று சந்தேகம் எழக் கூடும். ஆனால் அன்றைக்கிருந்த கொந்தளிப்பான சூழ்நிலையில் அவரது பெயரால் வெளியான அந்த அறிக்கையைப் பலரும் முழுமையாக நம்பிவிட்டார்கள்.

அதுவும் என்னைப் போன்ற இளைஞர்கள் பலரை அந்த வாசகங்கள் வீறு கொள்ளச் செய்ததில் வியப்பில்லை.

அறிக்கையைப் படித்ததும் என்னுள் ரத்தம் வேகமாகக் கொதித்தது.

காந்திஜியே சொல்லிவிட்டார். அப்புறம் என்ன? உடனே செயலில் இறங்க வேண்டியதுதான் என்ற ஆவேசத்துடன் அவசரம் அவசரமாக வெளியே கிளம்பிவிட்டேன்.

நேரே மண்ணடி போஸ்ட் ஆபீஸுக்குப் போய் வாசலில் இருந்த தபால் பெட்டிக்குள் தீக்குச்சிகளைக் கொளுத்திப் போட்டேன். அவை புஸ்ஸென்று புகைந்து போயிற்றே தவிர எரியவில்லை. இதை யாரும் கவனிக்கவில்லை. என்னை யாரும் கைது செய்யவும் வரவில்லை. உள்ளூர இது எனக்கு ஏமாற்றத்தை அளித்ததால் வேறு வழியின்றி நானே செக்குமேடு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்து என் வீரப்பிரதாபத்தைச் சொல்லி, "உடனே வந்து என்னைக் கைது செய்யுங்கள். நான் இங்கே போஸ்டாபீஸ் வாசலிலேயே காத்திருக்கிறேன்" என்றேன். அடுத்த சில நிமிடங்களுக்குள் போலீஸார் ஒரு வேனில் வந்து என்னைக் கைது செய்து கொண்டு போய் லாக்-அப்பில் வைத்தார்கள். கோர்ட் விசாரணைக்குப் பின்னர் ஒன்பது மாதம் சிறைத்தண்டனை பெற்று பெல்லாரி அலிபுரம் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். எட்டு

மாதங்களுக்குப்பின் ஆகஸ்டு தியாகி என்ற முத்திரையுடன் வெளியே வந்தேன்.

சுதந்திரம் பெற்ற பல ஆண்டுகளுக்குப்பின் விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு மானியமாக நிலம் வழங்கப்படும் என்று அரசாங்கம் ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. பிரபல காங்கிரஸ் தலைவர் திரு.பக்தவத்சலம் உட்பட பல பிரமுகர்கள் இந்த மானியத்துக்கு மனுச் செய்து பத்து ஏகர் நிலமும் பெற்றுக்கொண்டனர்.

ஏழைத் தொண்டனாகிய நானும் மனுப் போட்டேன்.

நீண்டகாலம் வரை நிலம் வரும் என்று காத்திருந்தேன். ஒரு நாள் என் பெயருக்கு ஒரு தபால் கார்டு வந்தது. அப்போது முதலமைச்சராக இருந்த ராஜாஜி தம் கைப்பட எழுதியிருந்தார். நம் தியாகத்தைப் பாராட்டி நிலம் சாங்ஷன் பண்ணியிருப்பார் என்று ஆவலோடு கார்டைப் படித்தேன். கார்டில் அவர் எழுதியிருந்த வாசகம் வருமாறு :

"அன்புள்ள சாவிக்கு, ஆசிர்வாதங்கள்.

தங்களுடைய விண்ணப்பம் பார்த்தேன். நிலம் கேட்டு உங்கள் தியாகத்தை விலை கூற வேண்டியது அவசியம்தானா?" என்று ஒரு கேள்வி கேட்டு கையெழுத்துப் போட்டிருந்தார்.

ராஜாஜியே இப்படி எழுதிவிட்ட பிறகு அந்த நிலம்

பற்றிய ஆசையை அப்போதே மறந்துவிட்டேன். எனது அன்றைய பொருளாதார நிலை, அந்த மானியத்தை மறுக்க வேண்டும் என்ற உணர்வை என்னுள் தோற்றுவிக்கவில்லை. ஆனாலும் ராஜாஜியே கடிதம் எழுதிவிட்டதால் அதை வேதவாக்காக மதித்து தியாகி நிலத்தையும் வேண்டாமெனத் தியாகம் செய்துவிட்டேன்!



கல்கி

# 12. கத்தரி விகடன்

ஆனந்த விகடன் அலுவலகம் அப்போது பிராட்வேயில் இருந்தது. இப்போது அப்பர் அச்சகம். ஒருநாள் பொறுப்பாசிரியர் கல்கி அவர்களைப் போய்ப் பார்த்து உதவி ஆசிரியர் வேலை கேட்டேன்.

"வேலையெல்லாம் இங்க ஒண்ணுமில்லே..." என்று சற்று அலட்சியமாகவே சொல்லி அனுப்பி விட்டார்.

ஏமாற்றத்துடன் திரும்பினேன். ஆனாலும் கல்கியை நேரில் சந்தித்துப் பேசியதில் ஓர் ஆனந்தம்!

அந்த நாட்களில் எனது நெருங்கிய நண்பராக இருந்தவர் தி.ஜ.ரங்கநாதன். மஞ்சரி ஆசிரியர் தி.ஜ.ர. என்றால் சட்டெனப் புரியும்.

நானும், தி.ஜ.ர.வும் தம்புச்செட்டித் தெருவில் ஒரு லாட்ஜில் தங்கியிருந்தோம். கல்கி அவர்களைப் போய்ப் பார்த்து உதவி ஆசிரியர் வேலை கேட்டு தோல்வியடைந்தது பற்றி தி.ஜ.ர.விடம் புலம்பினேன்.

"கவலைப்படாதீங்க. கல்கியிடமே உமக்கு நான் வேலை வாங்கித் தருகிறேன்" என்று நம்பிக்கையோடு சொன்னார். என்னால் நம்ப முடியவில்லை.

அப்போது தி.ஜ.ர. 'ஹநுமான்' பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்தார். சிலகாலம் ஹநுமானில் நான் அவருடன் சேர்ந்து உப ஆசிரியராகப் பணி புரிந்துகொண்டிருந்தேன். தி.ஜ.ரவுடன் எனக்கு நட்பு ஏற்பட்டது அப்போதுதான்.

ஹநுமான் சஞ்சீவி பர்வதத்தைக் கையிலேந்தி பறப்பதுபோல் வரையப்பட்ட ஓவியம்தான் அந்தப் பத்திரிகையின் சின்னம்! அதில் ஹநுமானின் வால் நீளமாகத் தீட்டப்பட்டிருக்கும். அதே மாதிரி விகடன் பத்திரிகையின் அரசியல் நிருபரின் வாலும் நீளமாக இருக்கும்.

"இந்த இரண்டு சின்னங்களின் வால்களையும் ஒரு கத்தரிக்கோல் வெட்டுவதுபோல் படம் வரைந்து அதையே நம் புதிய பத்திரிகைக்குச் சின்னமாகப் போட்டு விடலாம். புதிய பத்திரிகைக்குக் 'கத்தரி விகடன்' என்று பெயர் சூட்டி, விளம்பரம் செய்து விடலாம். இதை ஆனந்த விகடன் அலுவலகத்தில் பார்ப்பார்கள். 'விகடனுக்குப் போட்டியாக இன்னொரு விகடனா?' என்று யோசிப்பார்கள். போட்டி விகடன் வருவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். உடனே உம்மைக் கூப்பிட்டு வேலை தந்து விடுவார்கள். பாருங்களேன்" என்றார் தி.ஜ.ர.

"உங்க ஐடியா கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது போலுள்ளது" என்றேன்.

"பாருங்களேன்" என்றார் தி.ஜ.ர. நம்பிக்கையோடு.

நண்பரின் யோசனைப்படியே 'கத்தரி விகடன் வெளி வருகிறது' என்று ஓவியர் ஜி.எச்.ராவ் என்பவரைக் கொண்டு ஒரு டிஸைன் தயார் செய்தேன். ஹநுமான் பத்திரிகையிலேயே அந்த விளம்பரத்தைப் பெரிதாக வெளியிடச் செய்தார் தி.ஜ.ர.

விளம்பரம் வெளியான மறுநாள் மாலை நாங்கள் இரண்டு பேரும் தம்பு செட்டித் தெருவில் கடற்கரை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தோம்.

பின்னால் சைக்கிளில் வேகமாக வந்த ஆனந்த விகடன் ஆபீஸ் பாய், எங்களை நெருங்கியதும் ஒட்டி நிறுத்தி, ஒரு சிறிய துண்டுக் காகிதத்தை என்னிடம் நீட்டினான். அப்போது விகடனில் உதவி ஆசிரியராக இருந்த தேவன் எழுதியிருந்தார்.

"ஆசிரியர் கல்கி உங்களைப் பார்க்க விரும்புகிறார். உடனே விகடன் அலுவலகத்துக்கு வரவும்".

"பார்த்தீரா? கல்கியே உம்மைக் கூப்பிடுகிறார்! என்றார் தி.ஜ.ர. பெருமிதத்துடன்.

மறுநாள் காலை பதினோரு மணிக்கு நான் கல்கியைப் பார்க்கப் போயிருந்தேன். என்னைக் கண்டதும் கல்கி, "போன வாரம் நீ இங்கே வந்து வேலை கேட்டாயல்லவா? இப்ப ஒரு வேலை இருக்கு. வேணுமானால் சேர்ந்துக்கலாம்" என்றார். நான் மௌனமாக நின்றேன்.

"சம்பளம் நாற்பது ரூபாய்தான். ஆரம்பத்தில் அவ்வளவுதான் கொடுப்பார்கள்" என்று சொல்லி விட்டு, " மணியடித்து தேவனைக் கூப்பிடு" என்றார் பியூனிடம்.

தேவன் வந்ததும் "உனக்கு முதல்ல எவ்வளவு சம்பளம்?"

"நாற்பது ரூபாய்".

இப்படியே கதிர், நாடோடி இருவரையும் அழைத்து அவர்களின் ஆரம்ப சம்பளம் நாற்பது ரூபாய் என்பதை அவர்கள் மூலமாகவே உறுதிப்படுத்தினார்.

"என்ன? ஒப்புக் கொள்கிறாயா?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

"நாளைக்கு வந்து சொல்கிறேன்" என்றேன்.

"முடிவு பண்ண வேண்டியது நீதானே? இப்பவே சொல்லேன். என்ன யோசனை?" என்று கேட்டார். நான் தயங்கினேன். "என்ன சமாசாரம் சொல்லு" என்றார் கல்கி.

"வேலையில் சேர்ந்து கொள்கிறேன். ஆனால் சொந்தமா பத்திரிகை தொடங்கும் ஏற்பாட்டில் கொஞ்சம் பணம் செலவாயிட்டுது. பணம் கடன் வாங்கிச் செலவு செய்திருக்கிறேன். அந்தப் பணத்தைத் திருப்பித் தர வேண்டும்" என்றேன். 'எந்த மாதிரி கேள்விகள் வரும்? அவற்றுக்கு நான் எப்படியெல்லாம் பதில் சொல்ல வேண்டும், என்னென்ன சொல்ல வேண்டும்' என்பதையெல்லாம் தி.ஜ.ர. எனக்கு ஏற்கனவே பாடம் நடத்தியிருந்தார்.

"உனக்குப் பணம் கொடுத்தது யார்?" என்று கேட்டார் கல்கி.

"என் பெரிய மாமனார் புரசைவாக்கத்தில் இருக்கிறார். அவர்தான் பணம் போட்டிருக்கிறார்" என்றேன்.

"அவர் பணத்தை எங்கே போட்டார்? குளத்திலா

போட்டார்!"

நான் மௌனமாக இருந்தேன்.

"எவ்வளவு பணம்?"

ஆயிரம் ரூபாயாவது சொல்லியிருக்கலாம். என் தரித்திர புத்தி என்னை விட்டு எப்படிப் போகும்?

"நூற்றிருபது ரூபாய்!" என்றேன்.

"சரி, போய் அக்கௌண்டன்ட் வாஞ்சிநாதய்யரிடம் வாங்கிக்கோ" என்று கூறி வாஞ்சிநாதய்யருக்கு ஒரு சீட்டு எழுதி என்னிடமே கொடுத்தனுப்பினார்.

பணத்தை வாங்கிக் கொண்டு நேரே பூக்கடை காவல் நிலையத்துக்கு அருகிலுள்ள கதர்க் கடைக்குப் போனேன். கதர் 'சில்க்' வாங்கி அப்போதே ஜிப்பா தைத்துப் போட்டுக் கொண்டேன்.

மறுநாள் காலை ஆபீஸுக்குப் போனதும் கல்கி கூப்பிட்டனுப்பினார். என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, அர்த்தபுஷ்டியோடு ஒரு புன்னகை பூத்தார்.

"என்ன, நேத்து வாங்கிண்டு போன பணத்தில் ஜிப்பாவா! இதோ பார். நீ சில்க் ஜிப்பாவெல்லாம் போடக்கூடாது. கதர் வேட்டி, கதர்ச் சட்டைதான் போட்டுக்கொள்ளணும்" என்றார்.

அன்று கழற்றிப்போட்ட அந்த சில்க் ஜிப்பாவை நான் அப்புறம் தொடவே இல்லை.



நேருஜி

# 13. காந்தி மகாத்மா

காந்தி மகாத்மா நவகாளியில் பாதயாத்திரை துவங்கியிருந்த நேரம். இந்து -முஸ்லிம் கலவரம் காரணமாக நவகாளி முழுதும் பயங்கரப் படுகொலைகளும், பற்றி எரியும் வீடுகளும் பரவலாய்க் காட்சி தந்து கொண்டிருந்தன. அந்தப் பகைப்போரிலிருந்து மக்களை மீட்கவும், அமைதி வழிக்குத் திருப்பவும் மகாத்மா மேற்கொண்ட அந்த யாத்திரையில் நானும் கலந்துகொண்டேன்.

நவகாளியின் பூகோள அமைப்பே சற்று வித்தியாசமானது.

வயல் வரப்புகளின் வழியே நடந்து சென்றால், நடுவே ஒரு தோப்பு தென்படும் - அதற்கிடையே குட்டை போன்ற ஒரு நீர்த்தேக்கமும், அதைச் சுற்றிலும் இருபது முப்பது வீடுகளும் இருக்கும். கிட்டத்தட்ட ஒரு தீவுபோல என்று வைத்துக் கொள்ளலாம். அந்த மாதிரி ஏழெட்டு தீவுகள் கொண்டது ஒரு கிராமம். மரங்கள், குட்டைகள், வீடுகள் இப்படி அடுத்தடுத்து அமைந்துள்ள கிராமங்களைக் கொண்டதுதான் நவகாளி மாவட்டம்.

ஒரு தோப்பிலிருந்து இன்னொரு தோப்புக்கு நடந்து செல்லும்போது வழிநெடுகச் சிறிதும், பெரிதுமாய் வாய்க்கால்கள் குறுக்கிடும். காந்திஜியால் அந்த வாய்க்கால்களைத் தாண்டிச் செல்வது முடியாத காரியம் என்று கூடியிருந்தவர்கள் கருதியததால், மகாத்மா கடக்கவேண்டிய கால்வாய்களின் குறுக்கே

பலமான மூங்கில்களைப் போட்டு இணைத்து ஒரு தாற்காலிக பாலம் அமைத்துவிட்டார்கள்.

நான் கல்கி பத்திரிகையின் நிருபராகப் போயிருந்தேன். காந்திஜியைப் பார்த்துப் பேசுவது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை. அவருடைய மொழி பெயர்ப்பாளர் வங்காள யுனிவர்ஸிடி புரொபஸர் நிர்மல்குமார் போஸை அணுகி, கெஞ்சிக் கூத்தாடி பெரும் சாகஸத்தின் பேரில் பேட்டிக்கு அனுமதி பெற்றேன்.

ஒரு குடிலுக்குள் உறங்கிக்கொண்டிருந்த காந்திஜி அரை மணி நேரத்துக்கெல்லாம் எழுந்து உட்கார்ந்து கைராட்டையில் நூல் நூற்கத் தொடங்கி விட்டார்.

ராஜாஜியின் பெயரைச் சொல்லி, கல்கியின் பெயரைச் சொன்னதும் காந்திஜி, "அப்படியா? ராஜாஜிக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! நான் இங்கே பத்திரிகை நிருபர்கள் யாருக்கும் இங்கே அனுமதியில்லை என்று நான் ஏற்கனவே சொல்லி யிருக்கிறேனே. உன்னை மட்டும் அனுமதிப்பது சரியாகாதே!" என்று சொல்லி மறுத்துவிட்டார். "ஒரே ஒரு நாள் மட்டும் தங்கிவிட்டுப் போய்விடுகிறேன்" என்று நான் கெஞ்சிக் கூத்தாடியதின் பேரில் மகாத்மா மனமிரங்கி "இவ்வளவு தூரம் வந்தவிட்டாய். சரி; இன்று ஒருநாள் மட்டும் அனுமதிக்கிறேன்" என்று அந்த ஒரே ஒரு நாள் என்ற சொல்லுக்கு அழுத்தம் கொடுத்துச் சொன்னார்.

அதன்பின் அவர் குழுவில் நானும் ஒருவனாய் ஒட்டிக் கொண்டேன்.

வாய்க்கால் மீது வேயப்பட்ட மூங்கில் பாலங்கள் மகாத்மாவின் பயணத்துக்கு ஏற்றதாக இருந்தாலும் அதிலேயும் ஒரு சிக்கல் ஏற்பட்டது.

கலவரக்காரர்கள் சிலர் வேண்டுமென்றே அந்தப் பாலங்களின் மீது போடப்பட்டிருந்த மூங்கில்களை உடைத்து, அப்படி உடைத்தது தெரியாதபடி அவற்றின் மீது தழைகளைப் போட்டு மூடி மறைத்திருந்தார்கள்.

இந்தச் செய்தி காந்திஜியின் காதுக்கு எட்டியது.

'அவ்வளவுதானே!-அப்படியானால் நான் அந்தப் பாலங்களின் மீது நடக்காமல் தாண்டியே போய் விடுகிறேன்' என்றவர் அதற்காக அருகே இருந்த அகலமான வாய்க்கால் ஒன்றைத் தேர்ந்தெடுத்து தினமும் அதைத் தாண்டித் தாண்டி பயிற்சி செய்து கொண்டிருந்தார். அந்தப் பயிற்சி தொடங்கிய அன்று காலையில்தான் நான் அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன்.

அது மட்டுமல்ல, சற்று நேரத்துக்கெல்லாம் இன்னொரு அதிசயமும் நடந்தது. திடீரென்று மாகாத்மாஜி முகாமிட்டிருந்த அந்த இடத்துக்கு நாலைந்து கார்களும், ஜீப்புகளும் வரிசையாக வந்து நின்றன.

சுதந்திர இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த பண்டித நேருவும், வல்லபாய் படேலும், அவர்களோடு அரசு அதிகாரிகள் சிலரும் கும்பலாக வந்து இறங்கினார்கள். நேருவையும், படேலையும்

கண்டதும் மகாத்மாவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. மூவரும் ஒருவரை ஒருவர் மாறி மாறி கட்டித் தழுவிக் கொண்டார்கள்.

"பாபுஜி! எதற்காக இந்தக் கால்வாயைத் தாண்டிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் நேரு.

விஷயத்தை விவரித்துச் சொன்னார் மகாத்மா.

"ப்பூ... இவ்வளவுதானே...! இதற்காகவா இவ்வளவு பிரயாசை? பார்க்கிறீர்களா? இதோ, இதை நான் ஒரே தாண்டாகத் தாண்டிக் காட்டுகிறேன்!" என்று சவால் விடுவதுபோல் கேட்டார் பண்டிட்ஜி.

"எங்கே பார்ப்போம்...!" என்றார் காந்திஜி.

அவ்வளவுதான்; நேருஜி கச்சத்தை இழுத்துக் கட்டிக் கொண்டார். கிரிக்கெட் போட்டியில் வேகப் பந்து வீச்சாளர் பந்து வீசுமுன்பாகப் பல அடிகள் பின்னுக்குப் போய், அங்கிருந்து ஓடிவந்து பந்து வீசுவாரே, அப்படி நேருஜி கால்வாயிலிருந்து பல அடிகள் பின்னோக்கிப் போய் அங்கிருந்து வேகமாக ஓடிவந்து, ஒரே எட்டில் கால்வாயைத் தாண்டிக் குதித்தார்!

"அரேரே! அச்சா, அச்சா!" என்று அதிசயித்த காந்திஜி, அப்புறம் சொன்னதுதான் அவரது நகைச்சுவைக்கு உதாரணம்.

"பண்டிட்ஜி! நீங்கள் ரொம்ப சுலபமாகத் தாண்டிவிட்டீர்கள்! ஆனால் நான் ஒவ்வொரு

கால்வாயைத் தாண்டும்போதும் உங்களைப்போல பின்னுக்கு நடந்துபோய், அங்கிருந்து ஓடிவந்து தாண்டிக் கொண்டிருக்க முடியாதே!" என்று பலத்த சிரிப்புக்கிடையே கூறினார்.

நாட்டுப் பிரிவினையின்போது ஐந்நூறு கோடி ரூபாய் பாகிஸ்தானுக்கு இந்தியா தரவேண்டும் என்று ஒப்பந்தமாகி இருந்தது. இதை உடனே கொடுப்பதா, வேண்டாமா? என்பதுதான் பிரச்னை.

"கூடாது, கொடுத்தால் பாகிஸ்தான் அந்தப் பணத்தைக் கொண்டே யுத்த தளவாடங்களை விலைக்கு வாங்கி நம் தலைமீதே குண்டு போடும்" என்பது வல்லபாய் படேலின் வாதம். நேருஜியால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. "சரி, வாருங்கள். காந்திஜியைக் கலந்தாலோசித்து முடிவெடுக்கலாம்" என்று கூறி படேலையும் அழைத்துக்கொண்டு காந்திஜி தங்கியிருந்த ஸ்ரீராம்பூருக்கு வந்துசேர்ந்தார். ஆனால் காந்திஜியோ 'கொடுத்த வாக்கைக் காப்பாற்றியே திரவேண்டும். பணத்தை உடனே கொடுத்துவிடுங்கள்' என்று தீர்மானமாகக் கூறி, அவர்களை அன்றே வழி அனுப்பி வைத்துவிட்டார்.

என் பெருமையெல்லாம், மகாத்மா காந்தியை ஒரு வித்தியாசமான சூழலில், மிக முக்கியமான சரித்திரம் நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில்-அதுவும் நேருஜி, படேல் போன்ற மாபெரும் தலைவர்களை காந்திஜியுடன் சேர்த்துப் பார்க்கும் அபூர்வக் காட்சியைக் காண முடிந்ததே, அதுதான்!



காமராஜ்

# 14. காமராஜ்

பல்வேறு தலைவர்கள் தங்களது பல்வேறு தனித்தன்மைகளால் என்னை வியக்க வைத்திருக்கிறார்கள் என்றாலும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் எளிமை அவற்றில் தலையாய இடம் வகிக்கிறது.

அவரிடம் எப்போதுமே எனக்கு ஆழ்ந்த அன்பும், மரியாதையும் உண்டு. பலமுறை நான் டெல்லிக்குப் பயணம் செய்தது அவருடன்தான். தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்ததும் அவருடன் தான். அந்தக் காலத்தில் அவரோடு நெருங்கிப் பழகிய காரணத்தால் அவருடைய எளிய வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்திருக்கிறேன்.

அவரது ஆடம்பரம் என்று எதையாவது சொல்லவேண்டும் என்றால் மூன்றுவேளை கதர்ச் சட்டை மாற்றுவதை மட்டுமே சொல்ல முடியும். சட்டை எப்போதும் பளிச்சென்று இருக்கவேண்டும்.

காரில் சுற்றுப் பயணம் போகும்போது ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய்க்குச் சில்லறை நாணயங்களாக மடியில் கட்டிவைத்துக் கொள்வார்.

'எதுக்கு இவ்வளவு சில்லறை உங்களுக்கு?' என்று கேட்டால் 'போகிற வழியில் கார் நின்னுச்சினா, பிச்சை எடுக்கிறவங்க காரை சூழ்ந்துக்குவாங்க. காசு போட்டால் போயிடுவாங்க, அதுக்குத்தான்' என்பார். கையில் கடிகாரம்கூடக் கட்டுவதில்லை. கேட்டால்,

'என்னைச் சுற்றித் தான் எப்பவும் யாராவது இருப்பாங்களே... டைம் கேட்டா சொல்லிட்டுப் போறாங்க... தனியா நான் வேற ஏன் கட்டிக்கணும்னேன்...' என்பார்.

ஒரு சமயம் நான் அவரிடம் ஓர் இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொண்டிருக்கிறேன்.

ஒரு தீபாவளி நெருக்கத்தில் அவருடன் டெல்லி போயிருந்த போது தமிழ்நாடு கெஸ்ட்ஹவுஸில் அவர் தங்கியிருந்த அறையிலேயே என்னையும் தங்கவைத்தார். இரவு தூங்கப்போகும் முன் எனது 'வாஷிங்டனில் திருமணம்' புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தார். அவர் அதை முடித்துவிட்டுத் தூங்கும்வரை என்னால் விழித்துக் கொண்டிருக்க முடியவில்லை. நான் தூங்கிப் போய்விட்டேன். வெகு நேரத்திற்குப் பின் அவர் என்னைத் தட்டி எழுப்பினார்.

'என்ன இப்படி குறட்டை விடறீங்க... நானே குறட்டை விடுகிறவன்தான்... நீங்க என்னையும் மிஞ்சிட்டீங்க... உங்க குறட்டைச் சத்தம் என்னைத் தூங்கவிடாது போலிருக்கு. பக்கத்து ரூம்ல போய்ப் படுத்துக்குங்க' என்று சொல்லி அனுப்பிவிட்டார். அந்த நேரத்திலும் மறக்காமல், 'கதையைப் படிச்சு முடிச்சுட்டேன். நல்லா இருக்கு' என்று பாராட்டத் தவறவில்லை.

ஏதோ குறட்டை விஷயத்திலாவது பெருந்தலைவர் காமராஜரை மிஞ்சமுடிகிறதே என்று எனக்குள் பெருமை!

எப்போதும் பயணத்தின் போது அவருடன் ஒரு பெட்டி வரும்.

டில்லியில் நான் அவருடன் தங்கியிருந்த போது எனக்குள் உள்ளூர ஒரு குறுகுறுப்பு. அந்தப் பெட்டிக்குள் அப்படி என்னதான் இருக்கும்? என் நிருபர் புத்தி என்னைக் குடைந்து கொண்டிருந்தது!

இவரோ பிரமச்சாரி. எளிய வாழ்க்கை. ஒருநாள் அந்தப் பெட்டியைத் திறந்து சோதனை போட்டுவிட வேண்டியதுதான் என்று என் மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

ஒருநாள் அவர் காரியக் கமிட்டிக் கூட்டத்துக்குப் போயிந்தார். திரும்பிவர நேரமாகும் என்று தெரிந்தது.

அந்த நேரத்தில், ஒரு இரும்புச் சட்டத்தின் உதவியுடன் அந்தப் பெட்டியின் பூட்டை உடைத்துத் திறந்து விட்டேன்.

உள்ளே,

ஜான் கந்த்தர் எழுதிய 'இன்ஸைட் ஆஃப்ரிக்கா' புத்தகம், திருக்குறள், காண்டேகர், கம்பராமாயணம், மூன்று கதர்ச் சட்டைகள், ஒரு சேவிங்செட், இரண்டு வேட்டி, மேல் துண்டு நாலு.

நான் இவற்றை ஆராய்ந்து கொண்டிருக்கையில் எதிர்பாராமல் காமராஜர் உள்ளே வந்து விட எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

‘என்ன... என்ன... என்ன... பாக்கறீங்க?’ அவர் வருவதற்குள் என் துப்பறியும் வேலையை முடித்துவிட வேண்டும் என்ற முயற்சியில் தோற்றுப் போய், கைகால் வெலவெலத்து, அவர் முன்னால் அசடு வழிந்து எதையோ உளறிக் கொட்டினேன்.

ஒரு கணத்தில் எல்லாம் புரிந்து விட்டது அவருக்கு.

‘அடடே! கேட்டா நானே பெட்டியைத் திறந்து காட்டியிருப்பேனே! நல்ல பெட்டியைப் பாழாக்கிட்டீங்களே!...’ (அது ஒன்றும் அப்படி நல்ல பெட்டியில்லை. பழசுதான்!)

‘இல்லை... பூட்டை சரிப்படுத்திடலாம் என்று நான் சொன்னதும், அவர் பூட்டையும் பெட்டியையும் அப்படி இப்படி அசைத்துப் பார்த்துவிட்டு ‘ம்... சரியா வராது... கீழே தீனதாயள் இருப்பார். அவர் கிட்ட சொல்லி சரி செய்யச் சொல்லுங்க!’ என்று கூறிவிட்டு, சற்று நேரத்துக்கெல்லாம் மீண்டும் வெளியே புறப்பட்டுப் போய்விட்டார்.

பெருந்தலைவர் மரணச் செய்தி கிடைத்தவுடன் நான் ஒரு பூ மாலையுடன் திருமலைப்பிள்ளைத் தெருவுக்குப் பறந்தோடிப் போய், கண்ணீர் சிந்தியபடி அவருக்கு என் இறுதி அஞ்சலியைச் செலுத்திவிட்டுத் திரும்பினேன். செய்தி தீவிரமாகப் பரவாததால் கூட்டம் சேரவில்லை. போலீஸ் உயர் அதிகாரி நண்பர் பரமகுருவும், காமராஜரின் உதவியாளர் வைரவனும் மட்டுமே கண்கலங்கி நின்று கொண்டிருந்தார்கள்.

பின்னர் நண்பர் ராசாராம் அவர்கள் சொன்ன செய்தி காமராஜர் மீது எனக்கிருந்த மதிப்பை - அவரது எளியவாழ்க்கை மீது நான் கொண்டிருந்த வியப்பைப் பன்மடங்கு உயர்த்திவிட்டது.

அதாவது, காமராஜர் இறந்த அன்று அவரது பீரோவைத் திறந்து பார்த்தார்களாம்! அதில் வெறும் அறுபத்தேழு ரூபாய் மட்டுமே இருந்ததாம்!

இப்போதேல்லாம் என்னைப் பொறுத்தவரை என் தேவைகளை மிகவும் எளிதாக்கிக் கொண்டிருக்கிறேன். பயணம் போகும் போது வேட்டி, சட்டை தவிர வேறு எந்த டாம்பீகமும் கிடையாது.

காமராஜர், ராஜாஜி போன்ற தலைவர்களைப் பார்த்துப் பார்த்து என்னையுமறியாமல் எனக்குள் வளர்ந்து விட்ட பழக்கம் அது.

# 15. எடிட்டர் என்பவர் யார்?

ஒவ்வொரு இதழிலும் என்னென்ன மேட்டர் வரவேண்டும் என்பதைத் தீர்மானித்து அவற்றுக்கான படங்களை முடிவு செய்து, போட வேண்டிய இடங்களில் ஜோக்குகளைப் போட்டு, லே-அவுட்டில் கவனம் செலுத்தி பத்திரிகையை தினசரியோ, வாராவாரமோ, மாதா மாதமோ கொண்டு வருகின்ற ஆசிரியர்தான் எடிட்டர் என்று பொதுவாக அர்த்தம் கொள்ளப்படுகிறது. ஆனால் பிரசுரமாகிற ஒவ்வொரு மேட்டரையும், ஜோக் உள்பட எடிட் செய்கிறவர்தான் எடிட்டர் என்று நான் பொருள் கொள்கிறேன். நான் படித்த பத்திரிகைக்கூடங்களில் எனக்குச் சொல்லிக் கொடுத்தது அப்படி.

என் பத்திரிகைக்கூடங்களின் பெயர்; வாசன் - கல்கி.

வளவளவென்று எழுதக்கூடாது. அப்படியே எழுதப்பட்டிருந்தாலும், அதை அப்படியே பிரசுரம் செய்யாமல் வளர்ந்து போன முடியை வெட்டி 'ட்ரிம்' செய்வது போல எடிட் செய்து மேட்டரைச் சுருக்கி வெளியிட வேண்டும்.

அதுதான் எடிட்டரின் வேலை. ஒரு உண்மையை இங்கே சொல்லியாக வேண்டும். இதுவொன்றும் சுகமான வேலையோ, சுலபமான வேலையோ அல்ல.

நாம் எழுதியவற்றைத் திரும்பவும் ஒரு தரம் படிப்பதே போரடிக்கும். அப்படியிருக்க வெளியிலி ருந்து வருகின்ற மேட்டரையெல்லாம் படிப்பது

என்றால்? அந்தப் பொறுமைதான் ஒரு எடிட்டரின் மிக முக்கிய தகுதி.

கல்கியிலும், ஆனந்த விகடனிலும் பணியாற்றிய நாட்களில் கல்கி, வாசன் ஆகிய ஜாம்பவான்களின் எடிட்டிங் திறமையை நான் அருகே இருந்து கவனித்துப் பார்ப்பதுண்டு.

சிறுகதையோ, கட்டுரையோ எதுவாக இருந்தாலும் எழுத்தாளர்கள் பக்கம் பக்கமாக எழுதியிருப்பார்கள். அவற்றைக் கொஞ்சம் கூட தயவு இல்லாமல் பாரா பாராவாக வெட்டித் தள்ளுவார்கள் இந்த இரண்டு பேரும். பிரசுரமாகும் போது பார்த்தால் 'அடடா' என்று வியக்கும்படி இருக்கும். கல்லிருந்து சிலை வடிப்பது என்கிற கோணத்தில் பார்க்காமல், கல்லி லேயே சிலையிருக்கிறது. சிலையைச் சுற்றியுள்ள தேவையற்ற பகுதிகளைச் செதுக்கி எடுத்து வீசிவிட்டால் சிற்பம் தயார் என்ற கோணத்தில் பாருங்கள். அதுதான் எடிட்டிங்.

'உலகை யார் முதலில் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்கே மாம்பழம்' என்ற போது முருகர் என்ன செய்தார்? பந்தாவாக மயில் மீது ஏறி உலகம் முழுவதையும் பவனி வர ஆரம்பித்துவிட்டர். பிள்ளையார் என்ன செய்தார்? சுருக்கமாக அம்மா, அப்பாவைச் சுற்றி வந்து விட்டு 'உலகத்தைச் சுற்றியாயிற்று' என்றார். பிள்ளையாருக்கே வெற்றி மாம்பழம் கிடைத்தது. ஆகவே உலகத்தில் முதல் எடிட்டர் பிள்ளையார் தான் என்பேன் நான்.

'கம்போஸ்' ஆகிவந்த மேட்டரை எடிட் செய்வதற்காக கையில் எடுத்துவிட்டால் எனக்கு உலகமே மறந்து போகும்.

'நாலாவது பாராவில் நடுவில் இரண்டு வரிகளை தூக்கி விட்டால் பாதகமில்லை என்று தோன்றி அந்த வரிகளை அடிக்கும் போது முதல் பாராவில் இன்னும் கூட கை வைக்கலாமே என்று தோன்றும். பேனா மீண்டும் முதல் பாராவில் 'கிராப்' வெட்டும். இது ஏதோ மற்றவர்கள் எழுத்தில் மட்டும்தான் என்று நினைத்துவிடக்கூடாது. என் எழுத்துக்களிலேயே நான் கருணை காட்டுவதில்லை.

'சாவி' யில் நான் அதிக நேரம் எடுத்துக் கொண்டதே என் கேள்வி பதில் பகுதியை ஓ.கே. செய்வதற்குத்தான். எத்தனையோ முறை கேள்விக்கான பதிலை இரண்டுவரிகளில் எழுதி, திருத்தி, குறைத்து ஒரு வரியாக்கி, கடைசியில் ஒரே ஒரு வார்த்தையாகக்கூட ஆக்கியிருக்கிறேன்.

ஒரு ஐம்பது வருடத்துக்கு முந்தைய காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இப்போதைய எழுத்தாளர்கள் சுருக்கமாக எழுதுகிறார்கள் என்றே நான் சொல்வேன். இதில் தலைமை தாங்குபவர் சுஜாதா. அவர் எழுத்துக்கள் எந்த எடிட்டருக்கும் வேலை தருவதில்லை. அவரே அழகிய சிற்பமாகத்தான் செதுக்கி அனுப்புவார். சுஜாதாவின் பெரிய பிளஸ் பாயிண்ட் அவரது சுருக்கமான எழுத்துக்கள். ஷார்ட் அண்ட் ஸ்வீட்டாக எழதவேண்டும் என்று கல்கி

அவ்வப்போது எனக்கு அட்வைஸ் பண்ணுவார். சுஜாதா, அவராகவே அப்படி எழுதுகிறார் என்பதைப் பார்க்கும்போது சந்தோஷமாக இருக்கிறது.

வரலாறு சம்பந்தப்பட்ட எழுத்துக்களில் வர்ணனைகள் சற்று நீளமாக இருப்பதுண்டு. அரசகுமாரி தன் தோழியுடன் நீராடி விட்டு மஞ்சத்தில் அமர்ந்து அகிற்புகைபோட்டு மயிலிறகால் தலையை ஆற்றிக் கொள்ளும் ஒருகாட்சியை மட்டுமே தொடர்கதையில் ஒரு வார கதையாக எழுதிய காலங்களும் உண்டு... சில வாசகர்கள் அந்த வர்ணனைகளுக்காகவே வாங்கி ரசிப்பதும் உண்டு.

ஆனால் அப்படிப்பட்ட 'வளவளா'க்களில் எனக்கென்னவோ உடன்பாடு இல்லை.

1938 ஜூன் மாதம் சென்னை வானொலியில் கல்கி அவர்கள் பேசினார். தமிழில் சிறுகதை என்பது தலைப்பு. பின்னர் அவரது அந்த உரை விகடனில் பிரசுரமாயிற்று.

சுருக்கமாக இருக்க வேண்டும் என்பதற்கு கல்கி அதில் ஒரு உதாரணம் கொடுத்திருந்தார்.

...ஒரு நாள் காஞ்சிபுரம் உபய வேதாந்த தாத்தய்யங்கார் ஸ்வாமிகள், அவருடைய வேலைக்காரன் குப்பனைக் கூப்பிட்டு, 'அடே குப்பா! நீ உடனே ஸ்ரீபெரும்புதூர் திருவேங்கடாச்சாரி ஸ்வாமி வீட்டுக்கு ஓடிப்போய் திருக்குடந்தை திருநாராயண ஐயங்கார் ஸ்வாமி, திருக்கோவில் ஆராதனைக்கு

திருத்துழாய் எடுத்துக்கொண்டு, திருக்குளத்துக்குப் போன போது திருப்பாசி வழுக்கவே திருவடி தவறி விழுந்தார் என்று சொல்லு!' என்றார்.

'சரி சாமி' என்றான் குப்பன், தான் சொன்னதை குப்பன் சரியாக மனதில் வாங்கிக் கொண்டானா என்பதை உறுதி செய்து கொள்ள, 'அங்கே போய் என்ன சொல்வே, சொல்லு' என்று கேட்டார்.

குப்பன் சர்வசாதாரணமாக பதில் சொன்னான். 'இது தெரியாதா சாமி! கும்பகோணத்துப் பாப்பான் குட்டையில் விழுந்தான்.... இதுதானே செய்தி' என்றான்!

குப்பன் செய்தானே, அதுதான் எடிட்டிங்.

# 16. அப்பலோ ஆஸ்பத்திரியில்......

பெங்களூர் பெல் காலனியில்தான் என் மருமான் (சகோதரியின் மகன்) வசித்து வருகிறான். அடுத்த தெருவில் சுஜாதா வீடு. ஒரு நாள் சாயங்காலம் அக்கா கொடுத்த இட்லியைச் சாப்பிட்டு விட்டு சுஜாதாவைப் பார்க்க நடந்தே போனேன். தெருக்கோடி போவதற்குள் மார்பில் லேசாக வலி எடுக்கவே, ரோடு ஓரத்தில் இருந்த கற்பலகை மீது உட்கார்ந்து விட்டேன். சற்று நேர ஓய்வுக்குப் பிறகு மீண்டும் நடையைத் தொடர்ந்தேன்.

சுஜாதா என்னைக் கண்டதும் மலர்ச்சியோடு வாங்க,' என்றார். 'ஏன் ஒரு மாதிரி சோர்ந்து போயிருக்கீங்க?'

விஷயத்தைச் சொன்னேன்.

'ஹார்ட் ட்ரபிளாத்தான் இருக்கும். இதை இப்படியே வளரவிடக் கூடாது, உடனே டாக்டரைப் பார்த்துருங்க,' என்று கூறிக் கொண்டே அந்தப்புரம் திரும்பி மிஸஸ் சுஜாதாவை அழைத்து 'ஐஸோர்டில் மாத்திரை கொண்டு வா', என்றார். அது வந்ததும், 'இதை நாக்குக்கு அடியில் வச்சுக்குங்க. வலி குறைஞ்சிடும்', என்றார்.

சுஜாதாவுக்கு ஹார்ட் ட்ரபிள் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கப் போயிருந்த இடத்தில் எனக்கே நெஞ்சுவலி என்றபோது ஒரு சின்ன ஷாக்!

சென்னைக்கு வந்ததும் முதல் காரியமாகக் கார்டியாலஜிஸ்ட் ஆர்.எஸ்.ராஜகோபாலனைப் பார்த்தேன். அவர் ஈ.ஸி.ஜி., எக்ஸ்ரே எல்லாம் எடுத்துப் பார்த்துவிட்டு, கம்ப்யூட்டரைஸ்டு கார்டியோகிராமை இயக்கி அதில் என்னை ஓட விட்டார். ('சும்மா நிமிர்ந்து நின்னு காலை மாத்தி வையுங்க, ஆ, அப்படித்தான், வெரிகுட்!')

'ஹார்ட் டிரபிள் தான் சந்தேகமில்லை,' என்றது கார்டியோகிராம்.

'ஸ்பாட் பிளாக்கேட் (Spot Blockade) போல் தெரிகிறது. ப்ளட்வெஸலில் மூன்று குழாய்களில் அடைப்பு தெரிகிறது. நாளைக்கே நீங்கள் அப்பலோவுக்குப் போய் டாக்டர் கிரிநாத்தைப் பாருங்க. அவருக்கு லெட்டர் தருகிறேன். பைபாஸ் ஸர்ஜரியில் அவர் ஒரு எக்ஸ்பர்ட், அங்கே ஆஞ்ஜியோகிராம் சோதனையில் எல்லாம் தெளிவாகத் தெரிந்துவிடும். அப்புறம் ஆபரேஷன் தேவையா இல்லையா என்பதை கிரிநாத் பளிச்சென்று சொல்லி விடுவார். ஒரு சதவிகிதம் எனக்குச் சந்தேகம் இருந்தாலும் நான் உங்களை அங்கே அனுப்பிவைக்க மாட்டேன். தைரியமாகப் போய் வாங்க,' என்று கூறி டாக்டர் கிரிநாத்துக்கு ஒரு கடிதம் எழுதித் தந்தார்.

பின்னர் பை-பாஸ் ஆபரேஷன் பற்றி ஒரு குட்டி லெக்சர். 'ரோடு பழுதாப் போனால் அங்கே பக்கத்திலேயே இன்னொரு ரோடு போட்டு கனெக்ட் பண்ணிடறதில்லையா, அந்த மாதிரிதான், ரத்தக்

குழாய் கெட்டுப் போனா பக்கத்திலே இன்னொரு குழாயை இணைச்சுடறாங்க. பை-பாஸ் ஆபரேஷன் இப்பல்லாம் நம் ஊரிலேயே ரொம்ப ஈஸியா செய்யறாங்க. இதுக்காக அமெரிக்காவுக்கும் லண்டனுக்கும் ஓட வேண்டாம்.'

ஆபரேஷன் அப்பலோவில் தான் செய்து கொள்வதென்று அந்த நிமிடமே முடிவு செய்து கொண்டேன். ஆனாலும் அவர் எழுதிக் கொடுத்த கடிதத்தைக் கொண்டு போய் அலமாரியில் வைத்துவிட்டு, மறுநாளே வெளிநாட்டுக்குக் கிளம்பி விட்டேன். என் வீட்டில் எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்! இருதய சிகிச்சைக்கு ஒரு 'மெக்கா' என்று வர்ணிக்கப்படும் ஹ்யூஸ்டனுக்குத்தான் புறப்பட்டு விட்டேனோ என்று அவர்களுக்கு ஒரு சந்தேகம்! ஆனாலும் நான் ஹ்யூஸ்டனுக்குப் போகவில்லை.

நேராக ஜப்பான் போனேன். அங்கிருந்து ஸான்ஃப்ரான்ஸிஸ்கோ. என்னுடன் என் மகள் ஜெயாவும் அவள் கணவர் அர்த்தநாரியும் வந்தார்கள். ஜப்பானில் எக்ஸ்போ 85 முழுவதையும் சக்கர வண்டியில் அமர்ந்தபடியே சுற்றிப் பார்த்தேன். அங்கங்கே சக்கர வண்டி பிடித்து, அதில் என்னை வைத்துத் தள்ளிக் கொண்டு போகும் பொறுப்பை ஜெயாவும் அர்த்தநாரியும் ஏற்றுக் கொண்டார்கள்.

சரி, ஆபரேஷனைத் தள்ளிப் போட்டுவிட்டு, உயிருக்கு ஆபத்தான நெஞ்சு வலியைக் கூடவே அழைத்துக் கொண்டு அமெரிக்காவுக்கும்

ஜப்பானுக்கும் போவதற்கு அப்படி என்ன அவசரம் வந்தது?

அமெரிக்காவில் உடனடியாக நானே நேரில் சென்று கவனிக்க வேண்டிய முக்கிய வேலை ஒன்று இருந்தது. இன்னொன்று, இன்னும் சில நாட்களில் குவைத்திலிருந்து என் மூத்த மகளும் அவள் கணவரும் குழந்தைகளும் இந்தியாவுக்கே திரும்பிவிடத் திட்டமிட்டிருந்தார்கள். ஆபரேஷன் நடக்கும் போது அவர்களும் என்னோடு இருக்க வேண்டும் என்று நான் விரும்பியது. ஆபரேஷனைத் தள்ளிப் போட்டதற்கு இந்த இரண்டு காரணங்கள்தான்.

அமெரிக்கா போய் வந்தபிறகு, டாக்டர் ஆர்.எஸ்.ஆரை மறுபடியும் போய்ப் பார்த்தேன்.

என்னைக் கண்டதும் அவர் 'என்ன ஆபரேஷன் எல்லாம் முடிந்து விட்டதா?' என்று கேட்டார்.

'இல்லை.... அமெரிக்கா போய்விட்டு நேற்றுதான் திரும்பி வந்தேன்.'

அவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, 'என்ன ஸார் இது! உங்களை அப்பலோ போகச் சொன்னால் அமெரிக்கா போய் வந்தேன் என்கிறீர்களே!' என்றார்.

மறுபடியும் டெஸ்ட்டுகள் நடத்தினார். மறுநாளே அப்பலோவுக்குப் போய் டாக்டர் கிரிநாத்தைப் பார்த்தேன். ஆர்.எஸ்.ஆரின் ரிப்போர்ட்டை மிக கவனமாகப் பார்த்த அவர் 'முதலில் ஆஞ்ஜியோகிராம் செய்து பார்த்து விடலாம். அப்புறம்தான் எந்த

முடியும் எடுக்க முடியும்', என்றார்.

எனக்கு டயபடீஸ் இருந்ததால் முதலில் அதைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டியதாயிற்று. எனவே, என் உடம்பிலிருந்து ரத்தம் எடுத்து ப்ளட் ஷுகர் எவ்வளவு இருக்கிறது என்று பார்த்தார்கள். அப்புறம் தினமும் மூன்று முறை இன்ஸுலின் ஊசி போட்டார்கள். இப்படி ஒரு வார காலத்திற்குள் ரத்தம் எடுக்கவும் இன்ஸுலின் போடவும் என் உடம்பு முழுதும் சல்லடையாய்த் துளைத்து எடுத்து விட்டார்கள்.

ஆஸ்பத்திரி ரிகார்டுக்கு எம்.எஸ்.விசுவநாதன் என்ற என் அசல் பெயரைக் கொடுத்திருந்தேன். 'சாவி' என்று எந்தச் சமயத்திலும் யாரிடமும் சொல்லவில்லை. எம்.எஸ்.விசுவநாதன் என்ற பெயரைப் பார்த்துவிட்டு அங்குள்ள நர்ஸுகளும், சிப்பந்திகளும் என்னை மியூஸிக் டைரக்டர் விசுவநாதன் என்று எண்ணிக் கொண்டு அடிக்கடி என் அறைக்குள் வந்து ஒரு ஆவலோடு பார்த்துவிட்டுப் போனார்கள்.

ஒரு நாள் எனக்கு ஊசி போட வந்த நர்ஸ் 'ஏன் ஸார்! நீங்க மியூஸிக் டைரக்டர் விஸ்வநாதன் தானே?' என்று விசாரித்தாள். நான் 'இல்லை' என்றதும் அவள் முகத்தில் பெரிய ஏமாற்றம் தெரிந்தது.

அப்புறம் ஒரு வார காலம் என்னைக் காக்க வைத்தார்கள். கடைசியில், 'ஆஞ்ஜியோகிராம்' இயந்திரம் பழுதாகி விட்டதென்றும் ரிப்பேர் முடிய இன்னும் சில நாட்களாகுமென்றும் சொன்னார்கள்.

'வீட்டுக்குப் போனால் ப்ருஃப் பார்க்கலாமே,' என்று நான் என் மகள் உமாவிடம் சொல்லிக் கொண்டிருந்த போதே டாக்டர் கிரிநாத் வந்து, 'நீங்கள் வீட்டுக்குப் போகலாம், நாங்கள் போன் மூலம் தகவல் சொல்கிறோம். அப்போது வந்தால் போதும்', என்று சொல்லி அனுப்பி விட்டார்.

அடுத்த ஏழாவது நாள், 'மெஷின் சரியாகி விட்டது. உடனே வரலாம்,' என்று அப்பலோ என்னை டெலி போனில் அழைத்தது.

உடனே புறப்பட்டுச் சென்றேன்.

ஆஞ்ஜியோகிராம் செய்வதில் ஒரு பர்ஸெண்ட் ரிஸ்க் இருப்பதாக சம்பந்தப்பட்ட டாக்டர் வந்து சொன்னார். 'டாக்டர் ஆர்.எஸ்.ஆர். ஒரு பர்ஸெண்ட் கூட ரிஸ்க் இல்லை என்று சொன்னாரே! இதை இவர்கள் முன்பே சொல்லியிருந்தால் நான் இங்கு வராமலே கூட இருந்திருப்பேனே,' -மருமான் சந்துருவிடமும் மாப்பிள்ளை ராமமூர்த்திடமும் முணுமுணுத்தேன். ஆனாலும் முன் வைத்த காலைப் பின் வைக்க விருப்பமின்றி ஆஸ்பத்திரி ரிக்கார்டில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டு ஆஞ்ஜியோகிராம் சோதனைக்குத் தயாரானேன்.

அடிவயிற்றில் வலது பக்கம் துளைபோட்டு அதன் வழியே ஒரு ட்யூபை இருதயத்துக்குச் செலுத்துகிறார்கள். அது வாழைப்பழத்தில் ஊசியாகப் பயணம் செய்து உள்ளே ரத்தக்குழாய்களில் மசியைப் பூசி விடுகிறது. எங்கெல்லாம் ரத்த ஓட்டம்

தடைப்பட்டிருக்கிறதோ அந்த இடங்களை படத்தில் பார்க்க இந்த மை உதவுகிறது. ஆஞ்ஜியோகிராம் நடந்து கொண்டிருக்கும் போதே வீடியோப் படம் போல் எல்லாம் தெரிந்து விடுகிறது. நான் எதையும் பார்க்க விரும்பவில்லை. கண்களை மூடிக்கொண்டு விட்டேன். என்னுடைய ப்ளட் வெஸல்ஸில் மூன்று இடங்களில் ரத்த ஓட்டம் தடைப்பட்டிருப்பதை ஆஞ்ஜியோகிராம் வழி மொழிந்தது. (முன் மொழிந்தவர் டாக்டர் ஆர்.எஸ்.ஆர்.) எனவே, பை-பாஸ் சர்ஜரி அவசியம் என்பதும் முடிவாயிற்று.

'அப்படியானால் ஆபரேஷன் எப்போது?'

'அடுத்த வாரம் புதன்கிழமை வைத்துக் கொள்ளலாம். அதுவரை நீங்கள் இங்கே காத்திருக்கத் தேவையில்லை. வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுத்துக் கொண்டு திங்கட்கிழமை வந்து சேருங்க', என்று மீண்டும் எனக்கு விடுமுறை கொடுத்து அனுப்பி வைத்தார் சர்ஜன் கிரிநாத்.

திங்கட்கிழமை பகல் இரண்டு மணிக்கு ஆஸ்பத்திரிக்குப் புறப்படுவதென்று முகூர்த்தம் குறித்தாயிற்று. அதற்கு முன் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் பாக்கி வைக்காமல் செய்து முடித்தேன். யார் யாரிடம் எதை எதைச் சொல்ல வேண்டுமோ அதை அதை அவரவர்களிடம் சொல்லி முடித்தேன். என்னதான் மருத்துவ விஞ்ஞானத்தின் மீது நம்பிக்கை இருந்தபோதிலும் ஒரு சாதாரண மனிதனுக்கு இருக்கக் கூடிய சந்தேகங்களும் பயமும்

எனக்கும் இருந்தன. ஒருவேளை நாம் பிழைக்காமல் போய்விட்டால்?...

இதற்கிடையில் நண்பர்களும் உறவினர்களும் எனக்கு மிகுந்த உற்சாகம் தந்தார்கள். என் மனோதிடத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசி, எமன் வந்து கூப்பிட்டாலும், 'கொஞ்சம் இருடா-பத்திரிகையில் சில லட்சியங்கள் பாக்கி இருக்கின்றன. முடித்துவிட்டு வருகிறேன்' என்று துரத்தி அனுப்பும் தைரியசாலியாச்சே, நீங்கள்!' என்றெல்லாம் உற்சாகப்படுத்தினார்கள். என் வில் பவரைப் பற்றி அவர்கள் சொல்லச் சொல்ல நான் எழுத வேண்டிய வில் நினைவுக்கு வந்தது.

என் அப்பாவுக்கு நான் ஒரே மகன். அவர் எனக்கு வைத்துவிட்டுப் போன சொத்து இந்த பரந்த ஆகாயமும், பூமியும் தான். எனக்கோ இரண்டு பிள்ளைகள், வக்கிலை அழைத்து ஆகாயத்தை ஒருவனுக்கும், பூமியை ஒருவனுக்குமாக வில் எழுதி வைத்து விட்டேன்!

திட்கட்கிழமையன்று புறப்பட வேண்டிய நேரம் நெருங்க நெருங்க எனக்கு என்னவோ போல் இருந்தது. நெஞ்சில் ஒரு பாரம் அழுத்தியது. ஆனாலும் எதையும் பொருட்படுத்தாமல் தைரியமாகப் புறப்பட்டு விட்டேன். எனக்கு வேண்டிய சோப்பு, சீப்பு, முக்குக் கண்ணாடி, புத்தகங்கள், கிரிதாரி பிரசாத் கொடுத்த பகவத் கீதை, வேங்கடாசலபதி படம், நாமகிரிப்பேட்டை, மணிகிருஷ்ணசாமி, நீலா

குஞ்சுமணி, டி.கே. ஜெயராமன் இசைக் கேசட்டுகள் இத்தனையும் கைப்பெட்டியில் எடுத்து வைத்துக் கொண்டேன். வீட்டு வாசல் விநாயகரை வணங்கிவிட்டு, பந்து மித்திரர்கள் புடை சூழ ஆஸ்பத்திரி நோக்கிப் பயணமானேன். காரில் போகும்போது வழியெல்லாம் ஆபரேஷனைப் பற்றிய நினைவாகவே இருந்தது. கார் அண்ணா சாலையில் திரும்பிய போது, எல்.ஐ.ஸி. கட்டிடம், ஹிக்கின்பாதம்ஸ், ஸ்பென்ஸர் பில்டிங் போன்ற பழைய நண்பர்களைப் பாசத்தோடு ஒருமுறை (ஒருவேளை கடைசி முறையோ!) பார்த்துக் கொண்டேன்.

அப்பலோவில் எனக்கு ரிசர்வ் செய்திருந்த அறையில் ஏ.ஸி. குளிர் இதமாக இருந்தது. ஆனாலும் அந்த இதத்தை டாக்டர்கள் அதிக நேரம் அனுபவிக்க விடவில்லை. நலைந்து பேர் வந்து என்னைச் சோதித்துப் பார்த்துவிட்டு 'நாளைக்கே ஆபரேஷன்' என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

'நாளைக்கே ஆபரேஷனா! புதன்கிழமை என்றார்களே! இந்த திடீர் அறிவிப்பு என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அப்படியானால் என் ஆயுளில் ஒருநாளை இந்த டாக்டர்கள் குறைத்து விடுகிறார்களோ? என் மூத்த மகள் ஜெயந்தி ஆசையோடு செய்து கொண்டு வந்திருந்த சைனீஸ் ரைஸ் என் தொண்டைக்குள் இறங்கவில்லை.

இதற்குள், நாளை ஆபரேஷன் என்ற செய்தி கேட்டு

நண்பர்களும், எழுத்தாளர்களும், உறவினர்களும் என்னைக் காண அலைஅலையாய் வரத் தொடங்கி விட்டார்கள். நேரம் ஆக ஆக அந்த அறையில் ஒரு சின்ன மாத்திரை போட்டால் அது கீழே விழாத அளவுக்கு இட நெருக்கடி.

அமைச்சர் ராஜாராம் என்னைப் பார்க்க வந்தபோது அறையிலிருந்த கூட்டத்தைக் கண்டுவிட்டு, 'இதென்னய்யா, பொதுக் கூட்டமா நடத்தறீங்க?' என்று கேட்டார். 'அன்போடு பார்க்க வருகிறவர்களை வேண்டாமென்று சொல்ல முடியுமா?' சிறிது நேரம் என்னிடம் பேசிவிட்டு, 'சரி, நான் மறுபடி நாளைக்கு வந்து பார்க்கிறேன், வரட்டுமா?' என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டு விட்டார்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு ஆபரேஷன் என்பதால் இரவு முழுவதும் தூக்கமில்லை. ஏதேதோ கதம்பமான யோசனைகள்.

மறுநாள் பகல் இரண்டு மணிக்கு என்னை ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்து ஆபரேஷன் தியேட்டருக்கு கொண்டு போனார்கள். வராந்தாவில் என் மனைவி, மகள்கள், மருமகன்கள், பிள்ளைகள், மருமகள்கள், பேரன் பேத்திகள், எனக்கு ரத்தம் கொடுத்த (என் மகள் உமா, ஜெயா உட்பட) இன்னும் சில நண்பர்கள், மருமான் சந்துரு இவ்வளவு பேரும் சோகமே வடிவமாய், கண்கலங்க என்னைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர். நான் மல்லாந்து படுத்தப்படியே இவர்களைப் பார்க்கிறேன்.

மகள் மாலதியின் வாடிய முகம் தெரிகிறது. (அழாதேம்மா, வந்துருவேன்.) ஆபரேஷன் தியேட்டர் நுழைவு வாயில் வரை கூடவே வேகமாக வந்த என் மகன் பாச்சாவும், மூத்த மருமகன் விஸ்வநாதனும் சொன்ன வார்த்தைகள் என்னை உணர்ச்சி வசப்படுத்தி, கேவிக் கேவி அழ வைத்த போதிலும் அதை அடக்கிக் கொள்ள முயன்று தோற்றுப் போகிறேன். பெருகி வரும், கண்ணீரை வெட்கத்தோடு துடைத்துக் கொள்கிறேன்.

நான் ஏன் அழுகிறேன்? என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்.

ஒகோ, இதனால் தான் ஆண்டவன் மனிதனுடைய கடைசித் தேதியை முன்கூட்டியே தெரியப்படுத்துவதில்லையோ? மனிதனிடமுள்ள பாச உணர்வை எமன் முதலில் அகற்றி விட்டுப் பிறகே உயிரைக் கவர்ந்து செல்வதன் ரகசியம் அதுதானோ!

அறையை விட்டு ஆபரேஷன் தியேட்டருக்கு கிளம்பு முன் இரண்டு துச்சாதனர்கள் வந்து என் உடைகளைக் களைந்துவிட்டு ஒரு சின்ன டவலால் மறைக்க வேண்டிய இடத்தை மறைத்து விட்டுப் போகிறார்கள். ஆபரேஷன் தியயேட்டரில் சில ஸ்ரீதேவிகளும், அம்பிகாக்களும் நர்ஸ் வேடத்தில் அங்குமிங்கும் பரபரப்போடு அலைவதைப் பார்க்கிறேன்.

பச்சை நிற அங்கிகளில் டாக்டர்களும் நர்ஸுகளும் சூழ்ந்து நிற்கின்றனர். தியேட்டர் முழுவதும் சூரிய

வெள்ளம். ஆயுதங்களின் பளபளப்பு. என்னை ஸ்ட்ரெச்சரிலிருந்து ஆபரேஷன் மேஜைக்கு மாற்றியதும் மூடி மறைத்திருந்த அந்தச் சிறிய துண்டும் அகற்றப்படுகிறது.

என் நிர்வாணகோலம் எனக்குக் கூச்சத்தை ஏற்படுத்துகிறது. சுற்றிலும் உள்ள பெண்கள் பார்க்கிறார்களே என்று வெட்கம் பிடுங்கித்தின்கிறது.

எமனோடு உயிர்ப் போராட்டத்துக்கு நேரம் குறித்தாயிற்று. இன்னும் சில மணி நேரங்களில் என் தலைவிதி நிர்ணயிக்கப்படும் கட்டம். பிழைத்து வரப் போகிறேனோ, அல்லது இந்த உலகத்திலிருந்தே விடுதலை பெறப் போகிறேனோ என்ற கேள்விக் குறியோடு களம் புகுந்துள்ள நேரம். ஆனாலும் என் உயிர்ப்பிரச்சினையை மீறிக் கொண்டு மானப்பிரச்சினை மேலோங்கி நிற்கிறது. இதற்குள் யாரோ ஒரு சிறு துணியால் என் மானத்தைக் காப்பாற்றுகிறார்கள். மனம் நிம்மதி பெறுகிறது. அப்புறம் என்னென்னவோ நடக்கிறது. நான் அரை மயக்கத்தில் இருக்கிறேன். டாக்டர்களின் குரல்கள் மெலிதாய்க் கேட்கின்றன. வண்டியைத் தள்ளுகிறார்கள். மார்புக்கு மேலே சூரிய விளக்கை நகர்த்தி அட்ஜஸ்ட் செய்கிறார்கள். கத்தரிகளும், கத்திகளும் மின்னுகின்றன. ஊசி போடுகிறார்கள். இதோ, அனஸ்தேஷியா கொடுக்....

நான் கொஞ்சம் கொஞ்சமாக நினைவு இழந்து கொண்டிருப்பதை உணர்கிறேன். திடீரென அந்த

அறை, நான், டாக்டர்கள், நர்ஸ்கள், உபகரணங்கள், கூரைவிளக்குகள், சுவர்கள் எல்லாம் கிறுகிறுவெனச்சுற்றி ஒரு வட்ட மேகத்துண்டாக மாறி மேலே மேலே போகிறோம்.

'ஐயோ, நான் செத்துப் போய்விட்டேன், மேலே போய்க் கொண்டிருக்கிறேன்' என்ற உணர்வுதான் என்னுள் அப்போது சுத்தமாக இருந்தது. மனைவியும், மக்களும் காத்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு இந்தச் செய்தியை இன்னும் யாரும் போய்ச் சொல்லவில்லையா என்று கவலைப்படுகிறேன். அப்படிக் கவலைப்படும்போதே அந்த நினைப்பும் போய் விடுகிறது.

அடுத்த விநாடி (ஆபரேஷன் நடைபெற்ற ஐந்தரை மணி நேரம் எப்படிப் போயிற்று?) மார்பில் யாரோ எதையோ தைப்பதை உணர்கிறேன். லேசாக வலி தெரிகிறது.

'ஓ.... நான் சாகவில்லை, உயிரோடுதான் இருக்கிறேன்' என்று உணர்கிற போது அந்த மகிழ்ச்சியில் மார்பில் போடும் தையல் வலி பெரிதாகத் தெரியவில்லை.

அதற்குப் பிறகு நடந்தது எதுவும் எனக்குத் தெரியாது.

மறுநாள் காலை 'இன்ட்டென்ஸிவ் கேர்' வார்டில் நான் படுத்திருக்கிறேன். யாரோ என்னைத் தொட்டு எழுப்புகிறார்கள். கண் திறந்து பார்க்கிறபோது எதிரில்

என் ஆப்த நண்பர் எம்.கிருஷ்ணசாமி நின்று கொண்டிருக்கிறார். அவரை நான் அடையாளம் கண்டு கொள்கிறேன்.ஆப்ரேஷன் முடிந்து முதலில் நான் காண்பது அவரைத்தான். அவர் கையில் திருப்பதி பிரசாதம். புதன் கிழமைதான் எனக்கு ஆபரேஷன் என்று எண்ணிக் கொண்டு முதல் நாளே திருப்பதி சென்று எனக்காக பிரார்த்தனை செய்து பிரசாதம் கொண்டு வந்திருக்கிறார். இன்னொரு அதிசயம், அந்த இன்டென்ஸிவ் கேர் வார்டுக்குள் டாக்டர் அனுமதியில்லாமல் காற்று கூட நுழைய முடியாது என்ற நிலையில் நண்பர் எம்.கே. மட்டும் எப்படி வந்தார்? அவரை மட்டும் யார் அனுமதித்தது? அந்த ஏழுமலையானுக்கே வெளிச்சம்!

மறுநாள் மயக்கம் தெளிந்து கண் திறந்து பார்த்தபோது என் உடம்பின் பல்வேறு பகுதிகளில் டியூப்கள் பொருத்தப்பட்டு விதவிதமான திரவபாட்டில்கள், வெவ்வேறு கருவிகளோடு இணைக்கப் பட்டிருந்தன. என் மீது ஒரு மருத்துவ அவரைப் பந்தலே படர விட்டிருந்தார்கள்.

இரண்டு நாட்களுக்குப் பின் ஐ-ஸியிலிருந்து மீண்டும் என் அறைக்குக் கொண்டு போகப்படுகிறேன். அங்கே என் இரண்டு கால்களிலும், ஏதோ வலி இருப்பதை உணர்கிறேன். இதயத்தில் அல்லவா ஆபரேஷன்? கால்களில் ஏன் வலிக்கிறது? கால்களைப் பார்க்க வேண்டும் போல் ஓர் உந்துதல். பார்த்தால் இரண்டு கால்களிலும் கணுக்காலிலிருந்து முழங்கால் வரை கிட்டத்தட்ட ஓர் அடி நீளத்துக்கு

நீண்ட தையல் போடப்பட்டிருந்தது. காலில் ஏன் தையல்? இங்கிருந்துதான் வெய்ன் எடுத்து அடைபட்டிருந்த ரத்தக் குழாய்களுக்குப் பக்கத்தில் பை-பாஸ் குழாய் போட்டுச் சீரான ரத்த ஓட்டத்துக்கு வழி செய்துள்ளார்கள்.

மூன்று நாள் கழித்து என்னைப் பார்க்க சுஜாதா வந்திருந்தார். நான்தான் அதிகம் பேசினேன். என் ஆபரேஷன் அனுபவங்களை அவரிடம் எழுத்தாளர் கோணத்தில் சொன்னேன். 'இவ்வவு பெரிய சமாசாரத்தை ரொம்ப லேசாக்கி இத்தனை நகைச்சுவையோடு சொல்கிறீர்களே!' என்று சிரித்து மகிழ்ந்தார் சுஜாதா. என் பேச்சு அவருக்குப் புதுத்தெம்பையும் தைரியத்தையும் அளித்திருக்க வேண்டும். அப்புறம் ஏழெட்டு நாட்களே ஆஸ்பத்திரியில் இருந்தேன். டாக்டர் கிரிநாத் வந்து 'யூ ஆர் ஆல்ரைட்; உங்களை டிஸ்சார்ஜ் செய்கிறேன். நீங்கள் வீட்டுக்குப் போகலாம், பழையபடியே எல்லா வேலைகளையும் கவனிக்கலாம்,' என்றார்.

பிறவியிலேயே எனக்கு அமைந்து விட்ட மனத்திட்பம், மனைவியின் மாங்கல்ய பலம், ஏழுமலையானின் அருள் மூன்றும் சேர்ந்து என்னைக் காப்பாற்றி விட்டன.



## ஆசிரியர் சாவியின் நூல்கள்

வாஷிங்டனில் திருமணம்
விசிறி வாழை
வழிப்போக்கன்
வடம் பிடிக்க வாங்க, ஜப்பானுக்கு
வேதவித்து
கேரக்டர்
பழைய கணக்கு
இங்கே போயிருக்கிறீர்களா?
ஊரார்
திருக்குறள் கதைகள்
கோமகனின் காதல்
தாய்லாந்து
உலகம் சுற்றிய மூவர்
என்னுரை (கலைஞரின் முன்னுரையுடன்)
சாவியின் கட்டுரைகள்
சாவியின் நகைச்சுவைக்கதைகள்
ஆப்பிள் பசி
நான் கண்ட நாலு நாடுகள்
நவகாளி யாத்திரை
சிவகாமியின் செல்வன்

சாவி பப்ளிகேஷன்ஸ்
8-A, 7வது பிரதான சாலை
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28